

2016

වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

ANNUAL REPORT

ACC

නවීන තාක්ෂණ පිළිබඳ ආතර් සී ක්ලාක් ආයතනය.

நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகம்.

Arthur C. Clarke Institute for Modern Technologies.

உள்ளடக்கம்

1.0	பொது தகவல்	1
2.0	தலைவரின் செய்தி	4
3.0	நிறைவேற்றுனர் பொழிப்புரை	5
4.0	நிறுவகத்தின் பிரிவுகள்	9
5.0	தேசிய முக்கியத்துவம் மிகு கருத்திட்டங்கள்	10
6.0	ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்	15
6.1	கைத்தொழிற்துறை - எந்திரவியலில் தொடங்கப்பட்ட ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகள்	15
6.2	எந்திரவியலில் அக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்கள்	16
6.3	வானியலாராய்ச்சியில் அக ஆராய்ச்சி கருத்திட்டங்கள்	19
6.4	விண்வெளி தொழில்நுட்ப பிரயோகத்தில் ஆராய்ச்சி	21
6.5	பிரசுரிப்புகள்	22
6.6	சோதனை மற்றும் அளவீடுகள், வன்பொருள் திருத்துகை மற்றும் உசாவுத்துறை சேவைகள்	23
7.0	பயிற்சி, கல்வி மற்றும் தகவல்களை பரப்புதல்	26
7.1	தொழில்சார்பியலாளருக்காக தொடர் தொழில்சார் அபிவிருத்தி (CPD) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	26
7.2	அடிப்படை மற்றும் இடைநிலை தொழில்நுட்பவியல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	27
7.3	விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பிரபல்யப்படுத்துகையும் தகவல்களை பரப்புதலும்	27
8.0	சிறப்பு நிகழ்வுகள் மற்றும் கண்காட்சிகள்	31
9.0	மனித வள அபிவிருத்தி	32
10.0	2016 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று	33
10.1	நிதி நிலைமைக் கூற்று	33
10.2	அரசதுறை நிறுவகம் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிதி செயலாற்றுகைகூற்று	34
10.3	வருட இறுதிக்குரிய விரிவான நிதி செயலாற்றுகை கூற்று	35
10.4	காசுப்பாய்ச்சல் கூற்று	37
10.5	நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்	38
11.0	திட்டமிடப்பட்ட சிறிய மற்றும் இடைத் தவணை நடவடிக்கைகளின் சுருக்கம் ‘	54
12.0	தணிக்கையாளர் பொது அறிக்கை	56
13.0	கணக்காய்வாளர் நாயகத்தின் எண்டெமண்ட்டிற்கு உதவுகிறது	71

நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்த்தர் சி. கிளார்க் நிறுவகம்
கட்டுபெத்த,
மொரட்டுவ.
2018-05-01

கௌரவ. விஞ்ஞான தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

விஞ்ஞான தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு,
மூன்றாவது தளம், செத்சிரிபாய – 1வது கட்டிடம்,
பத்தரமுல்ல.

கௌரவ அமைச்சர்,

நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்த்தர் சி. கிளார்க் நிறுவகத்தின் 2016 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையுள்ள காலப்பகுதிக்குரிய ஆண்டறிக்கை

1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான தொழில்நுட்பவியல் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் VII ஆம் பகுதியிலுள்ள நியதிகளின் பிரகாரம் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்த்தர் சி. கிளார்க் நிறுவகத்தின் 2016 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கையுடன் கீழ் வரும் ஆவணங்களை சமர்ப்பிப்பதில் நான் பெருமையடைகிறேன்.

(அ) கணக்காய்வு செய்யப்பட்ட நிதிச் செயலாற்றுகை கூற்றின் ஒரு பிரதி
(ஆ) கணக்காய்வு செய்யப்பட்ட நிதி நிலைமை பற்றிய கூற்றின் ஒரு பிரதி
(இ) கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கையும் அவை தொடர்பில் அவதானிப்புரைகளும்

அமைச்சரவையின் அனுமதியினை பெறுதலிற்காக இந்த ஆவணங்களாவன சமர்ப்பிக்கப்படுகின்றன.

தங்கள் உண்மையுள்ள,

.....

எந்திரி. சனத் பன்னவென்னகே
பணிப்பாளர் நாயகம் மற்றும் சி.நி.அ.
நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்த்தர் சி. கிளார்க் நிறுவகம்.

1.0 பொது தகவல்கள்

ஆளுகை சட்டம்

நியதி சட்ட கூட்டுத்தாபனமான நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்த்தர் சி. கிளார்க் நிலையம் விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சின் அகப்பாட்டெல்லைக்குள் செயற்படுகின்றது. 1984 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்த்தர் சி. கிளார்க் நிலையத்தினை பின்தொடர்ந்து 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதியன்று 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலங்கை பாராளுமன்ற விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி சட்டத்தினால் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்த்தர் சி. கிளார்க் நிறுவகம் தாபிக்கப்பட்டது. சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்த்தர் சி. கிளார்க் நிறுவகத்தின் செயற்பாடுகள் வருமாறு;

(அ) இலங்கையில் நவீன தொழில்நுட்பவியல் அறிமுகப்படுத்துகையை விரைவுபடுத்துவதற்கு

(i) நவீன தொழில்நுட்பவியல் பிரயோகத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை ஆரம்பித்தல், மேம்படுத்தல், நடாத்துதல்

(ii) நவீன தொழில்நுட்பவியல் பிரயோகங்கள் தொடர்பில் செயலாற்றும் அரச மற்றும் தனியார் துறையினருக்கு அது தொடர்பில் ஆராய்ச்சி மற்றும் உதவிகளை வழங்குதல்

(iii) அரச தனியார் துறைகளினால் பொறுப்பேற்கப்பட்டவற்றின் தேவைப்பாடுகளுக்கு முகம் கொடுப்பதற்கு நவீன தொழில்நுட்பவியல் ஆளணிகளை பயிற்றுவித்தல்

(ஆ) எதிர்கால ஆய்வுகளை மேம்படுத்துவதற்கு

நவீன தொழில்நுட்பவியலின் பரப்பெல்லைக்குள் தொடர்பாடல் மற்றும் அதனுடன் தொடர்புடைய விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல், நுண்மின்னணுவியல், விண்வெளி தொழில்நுட்பம், மனித எந்திரவியல், ஒளிப்படவியல் மற்றும் புதிய சாதனங்கள் என்பன உள்ளடங்கும்.

தொலைநோக்கு

பிராந்தியத்தில் நவீன தொழில்நுட்பவியலில் முன்னணி புத்தாக்க நிலையமொன்றாகுதல்.

செயற்பணி

புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, பயிற்சி, கைத்தொழில் சேவைகள் மற்றும் சர்வதேச கூட்டுழைப்புக்கள் என்பனவற்றினூடாக அக அடிப்படையிலான நவீன தொழில்நுட்ப செயற்றிறன்களை விருத்திசெய்தல், வளர்த்தல் மற்றும் துணைமையாக இருத்தல்.

ஆளுகை அமைச்சு

விஞ்ஞான தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு

ஆளுனர் சபை உறுப்பினர்கள்
(2016 ஜனவரியிலிருந்து 2016 ஒக்டோபர் வரையில்)

1.	பேரா. கமால் டீன்	தலைவர் – ஆளுனர் சபை
2.	எந்திரி. சனத் பனவென்னகே நிறைவேற்று அலுவலர்	பணிப்பாளர் நாயகம் மற்றும் சிரேட்ட உறுப்பினர், ஆளுனர்கள் சபை
3.	பேரா. எ.கெ.டபிள்யூ. ஜயவர்தன	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
4.	பேரா. (திருமதி). திலிகா டயஸ்	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
5.	பேரா. சந்தன ஜயரட்ன	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
6.	திருமதி. லக்ஷ்மி ஜெகநாதன்	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
7.	பேரா. எஸ்.ஜே.பி.ஏ. ஜயசேகர	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
8.	பேரா. பீ.எஸ்.எம். குணரட்ண	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
9.	திருமதி. எஸ்.ஏ.சி. குலதிலக	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
10.	திரு. அஸ்லி டீ. வொஸ்	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
11.	திரு.கே.எம்.சி. பர்ணாந்து	உறுப்பினர், ஆளுனர்கள் சபை

ஆளுனர் சபை உறுப்பினர்கள்
(2016 ஒக்டோபர் 17 இலிருந்து 2016 டிசம்பர் 31 வரையில்)

1.	பேரா. கமால் டீன்	தலைவர் – ஆளுனர் சபை
2.	எந்திரி. சனத் பனவென்னகே	பணிப்பாளர் நாயகம் மற்றும் சிரேட்ட நிறைவேற்று அலுவலர் – உறுப்பினர், ஆளுனர்கள் சபை,
3.	பேரா. எ.கெ.டபிள்யூ. ஜயவர்தன	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
4.	பேரா. டீ.ஏ. தந்திரிகொட	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
5.	பேரா. (திருமதி). திலிகா டயஸ்	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
6.	பேரா. சந்தன ஜயரட்ன	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
7.	திருமதி. எஸ்.ஏ.சி. குலதிலக	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
8.	திரு. அஸ்லி டீ. வொஸ்	உறுப்பினர், ஆளுனர்கள் சபை
9.	திரு.கே.எம்.சி. பர்ணாந்து	உறுப்பினர், ஆளுனர்கள் சபை

2016 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சபை கூட்டங்களின் பட்டியல்

சபை கூட்டங்களின் எண்ணிக்கை	கூட்டம் இடம்பெற்ற திகதி
2016/01	21/1/2016
2016/02	18/2/2016
2016/03	17/3/2016
2016/04	26/4/2016
2016/05	19/5/2016
2016/06	27/6/2016
2016/07	27/7/2016
2016/08	18/8/2016
2016/09	15/9/2016
2016/10	9/12/2016

2.0 தலைவரின் செய்தி



2016 ஆம் ஆண்டானது தனித்துவமான வாய்ப்புக்களுடனும் சவால்களுடனும் உதயமாகியது. அந்த உதயமானது, இலங்கை, விண்வெளி எனும் பரந்த பரப்பெல்லையிலும் மற்றும் அது போன்று முக்கிய பல தொழில்நுட்பவியல் பரப்பெல்லைகளிலும் தனது தேசிய வல்லமையை சாதிப்பதற்கு நிறுவகம் வெற்றிகரமான பல முயற்சிகளை எடுத்துள்ளது.

நிறுவனமானது அதன் வரலாற்றிலேயே அதிகளவில் அதன் இலட்சியத்தை சார்ந்த ஒரு கருத்திட்டத்தை விண்வெளி என்னும் பரப்பெல்லையில் ஏற்றுக்கொள்டுள்ளது. அது, ரஷ்ய நாட்டின் சமரா அரச ஆராய்ச்சி பல்கலைக்கழகத்துடன் கூட்டிணைந்துஇலங்கை எந்திரவியலாளர்களினால் , நெநோ சென்மதியினை வடி வமைப்பதற்கு எடுக்கப்பட்ட பூர்வாங்க முயற்சிகள் ஆகும் எமது நாட்டின் விண்வெளி யுகம் குறித்து . காட்டப்படுவதற்கு எடுக்கப்பட்ட முதல் முதலான நடவடிக்கைக்குரிய கருத்திட்டமே இது. குறிப்பிட்டு சொல்லும் படியாக முன்னெடுக்கப்பட்ட இன்னுமொரு சாதனை, நில அவதானிப்பு தரவுகளை பெற்றுக்கொள்வதற்கு சீனா மற்றும் ரஷ்யா நாட்டு கூட்டினைவுடன் தாபிக்கப்பட்ட ஆராய்ச்சி நிலையமாகும். நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆதர் சி கிளாக் நிலையத்தின் இந்த கருத்திட்டத்திற்கு இலங்கை அரசின் மேல் மாகாண கருத்திட்டத்தின் கீழ் ஒரு இடமானது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆம் ஆண்டில் உறுப்புர 2015மை பெற்றுக்கொண்டதன் பின்னர் நவீன தொழில்நுட்பவியலிக்கான ஆதர் சி கிளாக் நிறுவனமானது, ஆம் ஆண்டு யூன் மாதம் இடம் பெற்ற 2016 Copuos இன் போது ஐக்கிய தேசிய முறைமையில் விண்வெளியில் உயர் இடத்தை கைப்பற்றிய அமைப்பு என்ற வகையில் இனம் காணப்பட்ட peaceful uses other space (CNCOPUOS) இன் முதலாவது செயற்குழு கூட்டத்தில் இலங்கையை பிரநிதித்துவப்படுத்துகின்றது

மேலும் நிறுவகமானது, விண்வெளி தொழில்நுட்பத்துடன் அது தகைமை கொண்டுள்ள ஏனைய தொழில்நுட்பவியல் பரப்பெல்லைகளை முன்னேற்றும் வகையில் பல கருத்திட்டங்கள், முறைமைகள் மற்றும் தீர்வுகளை அது தனக்காக வடிவமைத்ததுடன் வாடிக்கையாளரின் தேவையினை திருத்திப்படுத்தும் வகையிலும் வடிவமைத்தது

நிறுவனமானது தகைமைகள் கொண்ட அலுவலர்களை தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பவியல் அல்லாத பதவிகளில் தக்கவைத்துக் கொள்வதற்கு பெறும் சிரமத்தை எதிர் நோக்குகின்றது. இதற்கு ஏதுவாக அமைவது, ஒப்பீட்டளவில் நோக்குமிடத்து ஏனைய நிறுவனங்களை விட எமது நிறுவனத்தில் இத்தகைய தகைமை வாய்ந்த அலுவலர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தின் அளவு மிகவும் குறைவாகும். இது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு பெரும் தடையாக இருக்கின்றது.

மேலும் இத்தகைய ரீதியான தடங்கள்கள் இருந்த போதிலும் நிறுவனமானது ஆம் ஆண்டில் 2016 குறிப்பிட்டு சொல்லத்தக்களவு வளர்ச்சியினை சாதித்துள்ளது. நிறுவகம் தனது முயற்சிகளை சாதிப்பதற்கு தமது உறுதுணைகளை வழங்கிய ஆளுனர் சபையினருக்கும் எனது நன்றியை தெரிவிப்பதற்கு இச் சந்தர்ப்பத்தை சிறந்ததொரு வாய்ப்பாக நான் பயன்படுத்திக் கொள்கின்றேன். அத்துடன் பற்பல தடைகளுக்கு முகம் கொடுத்த போதிலும் தமது தளராத முயற்சியின் துணையுடன் கணிசமான அளவில் வெற்றியை சாதிக்கவும் அது போன்று நாட்டின் முன்னணியில் திகழும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையங்களில் ஒன்று என்ற பெயரை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வதற்கும் தமது தொடரறா சேவையை சிறப்பாக வழங்கிய நவீன தொழில்நுட்பவியல் ஆதர் சி கிளாக்கின் முகாமைத்துவத்தினருக்கும் மற்றும் பதவியணியினருக்கும் எனது நன்றியை மனமார தெரிவிக்க விரும்புகின்றேன்.


பேரா. கெமல் டீன்
தலைவர் - ஆளுனர் சபை

3.0 நிறைவேற்றுனர் பொழிப்புரை



மீளாய்வுக்குட்பட்ட வருடகாலப்பகுதியில் நிறுவகமானது, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, தொழில்நுட்பவியல் சேவைகள், பயிற்சி மற்றும் உசாவுத்துணை சேவைகள் போன்ற சகல துறைகளுக்கும் அதுபோன்று நிறுவகம் நிபுணத்துவம் கொண்டுள்ள சகல துறைகளிலும் தேசிய தொழில்நுட்பவியல் செயற்றிறனை வளர்க்கும் விதத்திலும் கணிசமானளவு பங்களிப்பினை தனது இரு மாபெரும் தடைகளை பொருட்படுத்தாது, அதாவது போதியளவு வேதனம் வழங்கப்படாமையால் புதிதாக ஆட்சேர்ப்பு செய்வதில் உள்ள பிரச்சனைகள் அத்துடன் பெறுபேறுகளை நோக்காது செயன்முறைகளுக்கு அமைவாக செய்யப்படும் பரிசோதனைகள் போன்ற பிரச்சனைகளை பொருட்படுத்தாது வழங்கியது.

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் குறிப்பிட்டு சொல்லத்தக்களவில் முன்னெடுக்கப்பட்ட பூர்வாங்க



முயற்சிகள் என்று கூறும்போது, அதற்குள் வடிவமைப்பு, விருத்தி, நிர்மாணம், சோதனை என்பவை தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் மற்றும் ரஷ்யாவினைச் சார்ந்த சமாரா தேசிய ஆராய்ச்சி பல்கலைக்கழகத்தினது உதவியுடன் எமது இலங்கை விஞ்ஞானிகள் பெற்றுக்கொண்ட தொழில்நுட்பவியல் அறிவுடன், 2020 ஆம் ஆண்டிற்குள் விண்ணுக்கு அனுப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நெநோ சென்மதி என்பனவற்றை கூறலாம். இந்த முயற்சியினை நனவாக்குவதற்கு நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகமும் அக பல்கலைக்கழகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரச அமைப்பாளர்களினைச் சார்ந்த கல்வியியலாளர்களுடனும் தொழில் சார்பியலாளர்களுடனும் இணைந்து செயற்படுகிறது. இந்தக் கருத்திட்டமானது விண்வெளி சார் ஆராய்ச்சிகளினை பொறுத்தவரையில் ஒரு மைல்க்கல்லாக அமையும் என்பதுடன் எதிர்காலத்தில் விண்வெளி சார் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கான பலமான அத்திவாரமாகவும் இருக்கும்.


சென்மதி தரவுகளை பெற்றுக்கொள்வதற்கும் அதுபோன்று அதனை மீண்டும் பகிர்வதற்கும் வடிவமைக்கப்படல் வேண்டும் என்று முன்மொழியப்பட்ட தேசிய மைய நிலையத்தின் விருத்தி, அதன் உள்ளகமைப்பும் மற்றும் ஏனைய தேவைப்பாடுகள் என்பவை தொடர்பில் 2016 ஆம் ஆண்டு நிறுவகமானது கணிசமானளவு வெற்றியை ஈட்டியுள்ளது. இந்நோக்கத்திற்காக மேல் மாகாண மாநகர பிரதான திட்டத்தின் கீழ் 10 ஏக்கர் நிலப்பரப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த நெநோ சென்மதியினது வடிவமைப்பின் பூர்வாங்க முயற்சிகளை தொடங்குதல் தொடர்பில் சர்வதேச கூட்டிணைவு பணிமேடையொன்றினை அமைப்பது பற்றி நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகமானது பல பேச்சுவார்த்தைகள் முன்னெடுத்துள்ளதுடன், இந்த சென்மதிகளின் ஊடாக இலவசமாகவோ அல்லது ஒரு சாதாரண விலையிலோ விண்வெளி தரவுகளை பெற்றுக்கொள்ளல் முடியும். பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளாவன நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கின் சேமிப்பகத்தில் சேமித்து வைக்கப்படும் என்பதுடன், தேசிய விருத்திக்காக இவற்றுள் பயன்படுத்தப்படும் அரச



அமைப்பாளர்களுடன் அவர்களின் தேவையை பொறுத்து பகிர்ந்துகொள்ளப்படும்.

விண்வெளி தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கு தேசிய செயற்றிறனை விருத்தி செய்து அதன் மூலம் நிலைபெறுதகு அபிவிருத்திக்கான பிராந்திய விண்வெளி பிரயோக கூட்டுறவு கருத்திட்டத்தின் (RESAP) ஊடாக வறட்சியினை வினைத்திறனுடன் கண்காணிக்கும் பொருட்டு ஆசியா மற்றும் பசுபிக்கிற்கான ஐக்கிய தேசிய பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவுடன் (UNESCAP) உடன் கூட்டிணைதல் தொடர்பில் தொடங்கப்பட்ட கருத்திட்டமாது நடைமுறையில் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கானது, நாட்டிற்கு பொருளியல் ரீதியாக நட்டத்தை ஏற்படுத்தக்கூடிய விவசாய வறட்சி மற்றும் அதுபோன்ற இயற்கை அனர்த்த காரணிகள் என்பனவற்றிற்கு எதிராக பிராந்தியத்திற்குள் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாகும். நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகமானது தேசிய வள முகாமைத்துவ நிலையம், விவசாய திணைக்களம், நீர்வள அபிவிருத்தி திணைக்களம், நீர்ப்பாசன திணைக்களம், இலங்கை மகாவலி அதிகார சபை, அளவையியல் திணைக்களம், குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் போன்ற குழு நிறுவனங்களுடன் கூட்டிணைந்து இந்த முன்னோடி கருத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னோக்கி எடுத்துச் செல்கிறது. மேலும் 2016 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத 28 ஆம் மற்றும் 29 ஆம் திகதிகளில் இலங்கையில் பிராந்திய வறட்சி முறைமைகளினை அமுலாக்குதல் எனும் விடயம் தொடர்பில் ஒரு உயர் மட்ட முன்னேற்ற கூட்டத்தினை UNESCAP உடன் இணைந்து நடாத்துவதற்கான ஒழுங்கமைப்புகளை நிறுவகம் செய்தது. இந்த கருத்திட்டத்தின் ஒரு பகுதி என்றவகையில் சென்மதி தரவுகளாவன இறக்கம் செய்யப்பட்டதுடன் NDVI, NDVI கோணவிடைத்தூரம் மற்றும் NDWI என்பன கணிப்பிடப்பட்டன. சென்மதி தரவுகளுடன் தொடர்புற்றவகையில் நில மதிப்பீட்டு கணிப்பீடு முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது.



வெற்றியீட்டப்பட்ட இன்னுமொரு விடயம் யாதெனில், 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் விருத்தி தீர்வுகள் என்பனவாகும். இதற்குள், சேய்மை மின்வலியளவு தரவு உட்பதிகையின் வடிவமைப்பும் விருத்தியும், அரச பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு பெறுகை கூறு (RVDL) வரை. பயோமெட் தனியார் நிறுவகத்துடன் கூட்டிணைந்து முன்னெடுக்கப்பட்ட முற்றுமுழுவதும் தன்னியக்கமாக இயங்கக்கூடிய வைத்தியசாலை கட்டில், இலங்கை விமான சேவைக்காக வடிவமைக்கப்பட்டு விருத்தி செய்யப்பட்ட இரு பெரிய மணிக்கூடுகள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்காக பாதுகாப்பு கமரா முறைமை மற்றும் களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்காக, வரை. மொபிடெல் நிறுவகத்துடன் இணைந்து ஒரு அன்ரொய்ட் பிரயோகம் என்ற வகையில் செய்யப்பட்ட புற்று நோய் பாதுகாப்பு முறைமை என்பன உள்ளடங்கும்.

இதைவிட இலங்கை புகையிரத நிலையத்திற்காக அல்ஸ்டம் வகுப்பு M9 இனை சார்ந்த

புகையிரதப் பெட்டிகள் சிறப்பாக திருத்தப்பட்டமையும் மற்றும் அநேக வாடிக்கையாளர் நிமித்தம் முன்னெடுக்கப்பட்ட அதி நுண்ணிய மின்னணுவியல் திருத்தல் முறைமையும் இதற்குள் உள்ளடங்கும்.







பிரதானமாக முன்னெடுக்கப்பட்ட அக – ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் எனும்போது அதற்குள் பூமத்திய ரேகை நாடுகளுக்கு பொருத்தமான உயர் செயலாற்றுகை மிகு எழுச்சி காப்பிகளை வடிவமைத்தல், மின்கலங்களின் இருப்பு மற்றும் அதன் நிலைப்பாட்டினை காட்டுவதற்கு ஈதர் நெட்டினை அடிப்படையாகக் கொண்ட காட்சியக முறைமை, நான்கு இணைவுகளுடன் பறக்கும் ஒரு கருவியினை (drone) வடிவமைத்து விருத்தி செய்தல், தேயிலையின் தரத்தை வகைப்படுத்தலும் நிறத்தை வேறுபடுத்தலும், வாகனத் தொகுதிகளை சுவடு காணலும் தகவல் உட்புகுகை முறைமையும் மற்றும் RF-ID இனை பயன்படுத்தி நூலக செயன்முறை தன்னியக்கலாக்க முறைமை என்பன உள்ளடங்கும்.










மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் வானியலாராய்ச்சி பிரிவானது மூன்று முக்கிய ஆராய்ச்சிகளில் தனது கவனத்தை செலுத்தியுள்ளது என்பதுடன், இவை தொடர்பிலான ஆராய்ச்சி ஆக்கங்களை அக ஆராய்ச்சி பத்திரிகைகளிலும் அது போன்று சர்வதேச விஞ்ஞான கருத்தரங்கிலும் பிரசுரிப்பதற்காக எழுதிக்கொண்டுள்ளது என்பதுடன் இந்த முக்கிய ஆராய்ச்சிகளுக்குள் பல வண்ண ஒளிமானி மற்றும் பிரிகைகளினைக் கொண்ட நிறமாலைமானி என்பனவற்றை பயன்படுத்தி ஸ்கூட்டி வகையினைச் சார்ந்த விண்மீன்களின் அலைவு நோக்கி முறையினை இனம் காணல், உயர்பிரிகை நிறமாலைமானி, 1.a வகையினைச் சார்ந்த சுப்பர் நோவாவிடமிருந்து விண்மீன் திரள் தூசு அழிவினை பரீட்சித்தல் மற்றும் கெல்பர் 2 ஒளி மானி தரவுகளைப் பயன்படுத்தி தேன்கூடுகளிலுள்ள மாறக்கூடிய டெல்டா ஸ்கூடி இனது நிலநடுக்கம் என்பன உள்ளடங்கும். மேலும் பிரிவானது பேராதெனிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பட்டம் பயிலும் மாணவியுடன் இணைந்து “மாறும் தன்மை கொண்ட ஸ்கூட்டி வகையினைச் சார்ந்த விண்மீன்கள் பற்றிய ஆய்வு” எனும் தலைப்பில் ஒரு கருத்திட்டத்தை ஆய்வு செய்வதற்கு ஏற்றுக் கொண்டுள்ளது.

இதைவிட விண்வெளி தொழில்நுட்ப பிரயோகம் மற்றும் RS/GIS இல் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆராய்ச்சி கருத்திட்டங்கள். அவையாவன ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகங்களுடன் கூட்டிணைந்து இலங்கையில் பாரம்பரிய நெல் வகைகளில் நிறமாலை பண்பியற் கூறுகளை மதிப்பிடல், தொல்பொருளாராய்ச்சி திணைக்களத்துடன் கூட்டிணைந்து மனிதர்களின் வழிநடத்தல் அற்ற வானூர்தி ஒன்றினை பயன்படுத்துவதன் மூலம் (UAV) தொல்பொருள் ஆய்வுகள் மற்றும் அகழ்வுகளுக்கு வானூர்தி ஒளிப்பட அளவியல்களை பயன்படுத்தல் என்பனவாகும். கருத்திட்ட தலைப்பு தொடர்பில் ஆராய்ச்சி கட்டுரையானது இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் (WinC 2016)

வயம்ப சர்வதேச மாநாட்டிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கையில் பாரம்பரிய நெல் வகைகளில் நிறமாலை பண்பியற் கூறுகள் மதிப்பிடப்பட்டன.

தகவல் தொழில்நுட்பவியல் பிரிவினால் அநேகமான முறைமை அபிவிருத்தி கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதன் பிரதான வாடிக்கையாளர்கள் எனும்போது, தேசிய பல்கலைக்கழகங்களையும் ஏனைய பொதுத்துறை முகவராண்மைகளையும் கூறலாம்.

வருடகாலப் பகுதியில், கைத்தொழிற்துறையின் தேவைகளுக்கு ஆதாரமாக இருக்கும் வகையில், நிறுவகமானது அதனால் வழங்கப்படும் சேவைகளை மிகவும் வினைத்திறனுடன் செய்தது. நிறுவகத்தினால் பிரதானமாக வழங்கப்படும் சேவைகள் எனும்போது அதற்குள், மின்னணுவியல் சோதனை மற்றும் அளவீட்டு கருவிகள் தரங்கணிப்பு, பலவகையான மின்னணுவியல் கருவிகள், துணையுறுப்பு, கூறுகள் போன்றவற்றின் செயலாற்றுகை சோதனை, மின்கல மற்றும் எழுச்சி காப்பு கருவிகள், மற்றும் தொடர்பாடல் மற்றும் ஒளிபரப்பு துறைக்கு வழங்கப்பட்ட எழுச்சி காப்பு சோதனைகள் என்பனவற்றை கூறலாம். 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் செயலாற்றுகை சோதனை அறிக்கைகள் 305 மற்றும் தரங்கணிப்பு அறிக்கைகள் 103 உம் முன்னெடுக்கப்பட்டன. அத்துடன் குறிப்பிட்டு சொல்லத்தக்களவு உசாவுத் துணைகள் மற்றும் வன்பொருள் மீட்பு என்பன செய்யப்பட்டன.

பயிற்சி எனும் பரப்பெல்லையின் கீழ் நிறுவகமானது உயர் தொழில்நுட்பவியல் அறிவினை வழங்கும் நிமித்தம் ஐந்து வகையான குறுந்தவணை தொடர் தொழில்சார் அபிவிருத்தி (CPD) நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கியது. அவையாவன, நவீன வலு மின்னணுவியல், நவீன மின்னணுவியல் ஆக்கக்கூறுகள், உட்பதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு முறைமை, ஒளி மற்றும் எழுச்சி காப்பு முறைமையின் வடிவமைப்பு மற்றும் செய்நிரலாக்கத்தக்க சுருக்க கட்டுப்படுத்தி என்பனவாகும் என்பதுடன் இந்த நிகழ்ச்சித்திட்டங்களாவன, அரச மற்றிம் தனியார் துறையினைச் சார்ந்த அமைப்பாண்மைகளினைச் சேர்ந்த எந்திரவியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் ஏனைய தொழில்சார்பியலாளர்கள் ஆகியோருக்கு அவர்களின் அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்பதுடன் இந்த கற்கைநெறிகளுக்கு கைத்தொழிற்துறையில் போதியளவு கேள்வியுள்ளது. வருடகாலப்பகுதியில் தொடர் தொழில்சார் அபிவிருத்தி கற்கைநெறிகளில் பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை 175 ஆகும். அதேநேரத்தில் நிறுவகமும் அதனது இடைநிலை பயிற்சி கற்கைநெறிகளின் ஊடாக பயிற்சிகளையும் வழங்குகிறது.

எந்திரி சனத் பன்னவென்னகே
பணிப்பாளர் நாயகம் பிரதான/நிறைவேற்று அதிகாரி.

4.0 நிறுவகத்தின் பிரிவுகள்

மின்னணுவியல் மற்றும் நுண்மின்னணுவியல் பிரிவு

தொடர்பாடல் பிரிவு / மனித எந்திரவியல் பிரிவு

கைத்தொழில் சேவைகள் பிரிவு

விண்வெளி தொழில்நுட்பவியல் பிரயோக பிரிவு / விண்வெளி தொழில்நுட்பவியல் பிரிவு / வானியலாராய்ச்சி பிரிவு

தகவல் தொழில்நுட்பவியல் பிரிவு

நிர்வாக மற்றும் மனித வள பிரிவு

நிதிப் பிரிவு

5.0 தேசிய முக்கியத்துவம் மிகு கருத்திட்டங்கள்

நெநோ சென்மதி கருத்திட்டம்



ஒரு அறிவு சார்ந்த பொருளியலை அடிப்படையாகக்கொண்ட ஒரு நாட்டின் வெற்றிக்கு, விண்வெளி தொழில்நுட்பங்களிலும் அது போன்று முக்கியத்துவம் மிகு ஏனைய தொழில்நுட்பங்களிலும் இலங்கையின் தேசிய செயற்றிறனை விருத்தி செய்தல் அதி முக்கியமாகும். இலங்கையின் எந்திரிகளால் வடிவமைக்கப்பட்டு விருத்தி செய்யப்பட்ட இலங்கையின் முதன்முதலான நெநோ செய்மதியினை விண்ணுக்கு அனுப்பும் செயற்பாடானது, ஒரு நாட்டின் தொழில்நுட்பவியல் முன்னேற்றத்திற்கான ஒரு அடையாளம் என கருதப்படலாம். அத்துடன், இச் செயற்பாடானது தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட ஒரு சாதனையாகவும் அத்தோடு விண்வெளி தொழில்நுட்ப செயற்றிறனின் முதல் கட்டத்தை சாதிப்பதற்கான ஒரு ஊர்தி என்றும் கூறலாம். இக் கருத்திட்டத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கானது பின்வருவனவற்றிற்கு திட்டமிடுகிறது.

•நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கிலும் மற்றும் ஏனைய பணயப் பொருளாளரின் அமைப்பாண்மைகளிலும் சென்மதி விருத்தி செய்தல் தொடர்பில், செயற்றிறனையையும் மற்றும் அடிப்படை தன்னம்பிக்கையையும் விருத்தி செய்தல்

•அடிப்படை விண்வெளி தொழில்நுட்பங்களில் தேசிய செயற்றிறனை பெற்றுக்கொள்ளுதல், இது, சென்மதி ஒன்றினை வடிவமைக்கக்கூடிய, விருத்தி செய்யக்கூடிய, நிர்மாணிக்கக்கூடிய மற்றும் சோதிக்கக்கூடிய செயற்றிறன் மிகு எந்திரிகள் மற்றும் விஞ்ஞானிகளினை விருத்தி செய்ய உதவும்.

•இலங்கையில் நெநோ தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட கைத்தொழிற்துறையை விருத்தி செய்வதற்கு விண்வெளி விஞ்ஞானம் மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய துறைகளில் உயர் தொழில்நுட்பவியல் அபிவிருத்தியினை மேம்படுத்தல். நெநோ சென்மதியானது நியம அளவுகளில் அதாவது 10 செ.மீ (4 அங்குலம்) கனவளவில் 1 கிலோ கிராமிலிருந்து 10 கிலோ கிராம் நிறையில் கட்டப்படும். சில நெநோ சென்மதிகள் இரண்டு அல்லது மூன்று பிரிவுகளை கொண்டதாக இருக்கும். இந்த வகையான சென்மதிகளும் இதைவிட குறைவான அளவினைக்கொண்ட சென்மதிகளும் பயன்பாடு மிகு விஞ்ஞான தரவுகளை விநியோகிக்கும் சோதனை கருவியாக செயற்படுவதுடன் வர்த்தக ரீதியிலான சேவைகளையும் செய்யும். மரபு ரீதியிலான சென்மதியினை விட நெநோ சென்மதி நிர்மாண செலவினம் குறைவாக இருப்பினும் இந்த நெநோ சென்மதியின் செயலாற்றுகையின் அளவு அதிகமாகும்.

இலங்கையின் செயற்றிறனையும் மற்றும் பிரயோகத்தையும் விருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தலினை தனது பணிப்பாணையில் கொண்டுள்ள தேசிய முகவராண்மையான நவீன

தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகமானது, விண்வெளி தொடர்பிலான விடயங்களில் நிபுணத்துவமும் அரச விண்வெளி ரொக்கட் நிலையத்துடன் இணைந்தும் பணியாற்றும் ரஷ்யா நாட்டினைச் சேர்ந்த சமரா பல்கலைக்கழகத்துடன் கூட்டிணைந்து சேய்மை உணர் செயற்றிறனுடன் செயற்படக்கூடியதும் இலங்கையின் முதன்முதலானதுமான நெநோ சென்மதியினை வடிவமைத்து, விருத்தி செய்து, நிர்மாணித்து, பரிசோதித்து விண்ணுக்கு அனுப்புவதற்கான ஒரு கருத்திட்டத்தை தொடங்கியுள்ளது.


இந்த ரீதியிலாக ஆரம்பிக்கப்படவுள்ள இந்த பூர்வாங்க முயற்சியினை திட்டமிடல் தொடர்பிலான முதன் முதல் பயிற்சிப் பட்டறையானது 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் ரஷ்ய நிபுணர்களுடன் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

விவசாயத்திற்கு ஏற்படக்கூடிய வறட்சியினை கண்காணித்தலும் அதை முன்கூட்டியே அறிவித்தலும் (UN-ESCAP முன்னோடி கருத்திட்டம்)

ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் விவசாயத்தை பொருளாதாரமாகக் கொண்ட நாடுகளின் உறுதித் தன்மையினை கட்டியெழுப்பும் நோக்குடன் வறட்சியினை கண்காணித்து முன் அறிவித்தல் செய்வதற்குரிய ஒரு கருத்திட்டத்திற்கான பிராந்திய கூட்டிணைவு திறமுறை ஒன்றினை UNESCAP அமுல்படுத்துகை செய்கிறது. இந்த பொறிமுறையானது, பருவத்திற்குரிய சென்மதித்தரவுகள், வாடிக்கையாளரின் தேவைக்கு ஏற்றால் போன்ற உலர் உணவுகள், மற்றும் ESCAP உறுப்புரிமை நாடுகளுக்கு விவசாயத்தின்போது ஏற்படக்கூடிய வறட்சியினை அதிக வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்வதற்கு அந்நாட்டு விவசாயிகளின் அறிவினையும் செயற்றிறனையும் அதிகரிப்பதற்கான விசேட செயற்றிறன் அபிவிருத்தி பயிற்சிகள் போன்றவற்றை வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளது. இந்த வறட்சி கண்காணிப்பும் அதனை முற்கூட்டி தெரிவித்தலும் என்ற கருத்திட்டத்தை செயற்படுத்துகை செய்தற்கான முன்னோடி நாடாக இலங்கை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

வறட்சி தொடர்பில் விண்வெ ளியிலிருந்து பெறக்கூடிய தரவுகளாவன, வறட்சியானது ஏற்படுவதற்கு மிக முன்னரேயே உணர்த்திவிடும் என்பதனால், கொள்கை அமைப்பாளர்களும் அதுபோன்று அதிகாரிகளும் அந்த வறட்சியினை தணிப்பதற்குரிய நடவடிக்கைகளை மிக முன்னரேயே எடுக்க முடியும். இவ்வாறு வறட்சியினை முற்கூட்டியே கண்டறிவதற்கு இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகள் தமது நிலப்பரப்புக்கு இசைவான முறையில் தமது சொந்த கண்காணிப்பு முறைகளையும் அதுபோன்ற தமது சொந்த அதிநவீன முறையில் தொழில்நுட்பவியல் முறைகளையும் முன்வைத்துள்ளனர். இந்தியா மற்றும் சீனாவின் பெருந்தன்மை காரணமாக அவர்களின் உதவியுடன் ESCAP தனது, இவ்விடயம் தொடர்பில் தொழில்நுட்பவியல் நிபுணத்துவத்தையும் மற்றும் பயிற்சியினையையும் இக் கருத்திட்டம் தொடர்பில் உள்ள அந்நாட்டினது அக வழிமுறையினூடாகவும் விண்வெளி தொழில்நுட்பவியல் மையத்தினூடாகவும் கிடைக்கப்பெறச் செய்கின்றது. ஆர்தர் சி. கிளார்க் நிறுவகமானது வறட்சி கண்காணிப்பு கருத்திட்டத்தை அமுல்படுத்துகை செய்கிறது.





நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகமும் ESCAP உம் கூட்டிணைந்து, பிராந்திய வறட்சி பொறி முறையினை இலங்கையில் அமுல்படுத்துகை செய்தல் பற்றிய ஒரு உயர் மட்ட முன்னேற்ற கண்காணிப்பு கூட்டத்தை கல்கிசையில் உள்ள மௌன்ட் லெவனியா விருந்துபசார விடுதியில் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் ஒழுங்கமைப்பு செய்தது. சென்மதி தரவுகளை பயன்படுத்தி வறட்சி சுட்டிகளான NDVI, NDVI அனோமலி மற்றும் NDWI என்பன கணிப்பீடு செய்யப்பட்டது. சென்மதி தரவுகளை நேரடியாக அவதானித்து பெறப்படும் தகவல்களின் பெறுமான அளவு கணிப்பீடானது நடைமுறையிலுள்ளது.

நில அவதானிப்பு தரவுகளை பெறுவதற்கும் பகிர்வதற்குமான தேசிய மைய நிலையம்

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு, ஒரு பயனுறுதி மிகு வள திட்டமிடுகை மற்றும் முகாமைத்துவ கருவியொன்றாக நில அவதானிப்பு மற்றும் சேய்மை உணரி தரவுகளை பயன்படுத்தும் செயன்முறையானது, சேய்மை உணரி தரவுகளை ஒரு மட்டுப்படுத்தப்பட்ட சாதாரணமான விலையில் பெற்றுக்கொள்ள முடியாமை, தரவுப் பயன்பாட்டில் மற்றும் சம்பந்தப்பட்ட அமைப்பாண்மைகளிடையே இவற்றின் பிரயோகம் என்பவை தொடர்பில் போதியளவு கூட்டிணைவு இல்லாமை ஆகிய காரணிகளின் காரணமாக தடைப்பட்டுள்ளது. இது நீண்ட கால ரீதியில் நாட்டின் அபிவிருத்தி செயற்றிறனை மட்டுமன்றி விண்வெளி தொழில்நுட்ப முன்னேற்ற செயற்றிறனிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த கருத்திட்டத்தின் நோக்கானது, ஏனைய அமைப்பாண்மைகளுக்கும் சேய்மை உணரித் தரவுகளை ஒரு மட்டுப்படுத்தப்பட்ட சாதாரண விலையில் கிடைக்கச் செய்தலும் அதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு விண்வெளி தொழில்நுட்ப பயன்பாட்டினை மேம்படுத்தலும் ஆகும். உள்ளக அபிவிருத்தி என்பதன் கீழ், புதிய சேமிப்பக அறையில் கணனி சேமிப்பகங்கள் (Blade servers) நிறுவுகை பணியானது பூர்த்தியடைந்துள்ளது. ஒரு மெய்யான நில நிலையமொன்று (VGS) வசதியானது அமைக்கப்பட்டுள்ளது. புவியியல் நிலையத்திற்கு அடிப்படை GIS SW ஆனது, சோதனை இடம் சார் தரவுகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

புவி வரைபடவியல் இட அமைவு 6°49’ 38.48”N, 80° 2’ 8.20”E யின் கீழ், நில அவதானிப்பு சென்மதி தரவுகளை பெற்றுக்கொள்வதற்கு நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கினால் முன்மொழிவு செய்யப்பட்ட சென்மதி நில நிலையத்தின் நிமித்தம் 10 ஏக்கர் விஸ்தீரணத்தைக் கொண்டதொரு நிலமானது இலங்கை அரசின் மாநகர கருத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது.





வகுப்பு M9 புகையிரத பெட்டிகளினை ஆழமாக சோதித்தலும் மற்றும் உயர்ந்த அளவில் வன்பொருள் ரீதியிலான கோளாறுகளை திருத்தலும் இலங்கை புகையிரத சேவையின் IGBT சாரதி கூறுகள்

இலங்கை புகையிரத சேவையின் கோரிக்கைக்கு அமைவுற, இரு இழுவை கட்டுப்பட்டு அலகுகளினது கோளாறுகளாவன வெற்றிகரமாக கண்டுபிடிக்கப்பட்டு திருத்தப்பட்டு, கள பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு அல்சம் வகையினைச் சார்ந்து இரு புகையிரத பெட்டிகளுக்கு பொருத்தப்படுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டது. உயர்ந்த மட்டத்திலான இந்த வன்பொருள் திருத்துகை செயற்பாடானது, மறுவலமான எந்திரவியல் செயற்பாட்டின் ஊடாக வடிவமைப்பு விபரங்களை பிரித்தெடுத்தல் என்பதையும் உள்ளடக்கும்.



இலங்கையில் தேசிய வானியல் ஆராய்ச்சிக் கூடம் (NAOSL)

விரைவான பொருளாதார வளர்ச்சியினை சாதிப்பதற்கு விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்திற்கு வழங்கப்பட வேண்டிய பங்களிப்பின் முக்கியத்துவமானது, அரசின் அபிவிருத்தி கொள்கை சட்டகத்தில் ஒரு முக்கியப்படுத்தப்பட்ட விடயமாக காட்டப் பட்டுள்ளது. விஞ்ஞான ஆராய்ச்சியில் உள்ளடங்கியுள்ள சகல துறைகளிலும் வானியலாராய்ச்சியானது அதி முக்கிய இடத்தை பெறுவதற்கு ஏதுவாக அமைவது,



பொதுமக்களினால் அவ்விடயம் தொடர்பில் காட்டப்படும் அதி ஆர்வமே ஆகும். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் பால் அவதானத்தை செலுத்தினால், இந்த ஆர்வத்தின் விளைவளவு கலாச்சார மற்றும் சமூக நன்மைகளை சமுதாயத்திற்கு பெறுபேறாக தருதலாகும். விஞ்ஞான தொழில்நுட்பத்திற்கு அறிமுகப்படுத்துகை எனும்போது அது வானியல் பற்றிய ஆராய்ச்சிக்கு மாணவர்களை கவருதலும் அதுபற்றி அறிவதற்கு ஊக்கப்படுத்தலும் ஆகும்.

நாம், ஆராய்ச்சி வகுப்பினைச் சார்ந்ததும் 1.5 மீற்றர் நீளத்தை உடையதுமான மனித எந்திரவியல் தொலைநோக்குக் காட்டியுடன் கூடிய ஒரு தேசிய வானியல் ஆய்வுகூடமொன்றை விருத்தி செய்து உதவி செய்யும்படி இலங்கை அரசிடம் நாம் கோரியுள்ளோம். நாட்டில் வானியல் ஆராய்ச்சி மற்றும் கற்கையை விருத்தி செய்வதில் இந்த கருத்திட்டம் முக்கிய பங்கினை வழங்கும். இந்தப் பிரேரணையில் விவரிக்கப்பட்டுள்ள, இந்த புதிய வசதியானது நாட்டிலேயே மிகப் பெரிய தொலைநோக்குக் காட்டியாக இருப்பது, இது வில்பத்து பிரதேசத்து வானின் மாயாஜாலங்களை அற்புதமாக வெளிப்படுத்தும்.

சேய்மை மின்வலியளவு தரவு உட்பதிகை மற்றும் பெறுகை கூறு

அரச பாவனை ஆணைக்குழுவிற்காக சேய்மை மின்வலியளவு தரவு உட்பதிகை மற்றும் பெறுகை கூறும் தற்போது மின்னணுவியல் பிரிவினால் விருத்தி செய்யப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. பிரதான வலு விநியோகத்தினை சேய்மை முறையின் மூலம் கண்காணிக்கும் விதத்தில் சேய்மை மின் வலியளவு தரவு உட்பதிகையானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அதி நவீன தொழில்நுட்பவியல் கருவியானது, ஒற்றை அவத்தை வலு விநியோகிப்பு ஒன்றின் கம்பியினூடாக செல்லும் மின்வலியளவு சாராமாறிகளின் நெகிழ்வுத் தன்மையினையையும் மற்றும் உடனுக்குடன் அத்தரவுகளை கண்காணிக்கக்கூடிய வசதியினையையும் வழங்குகிறது. மற்றும் இந்தக் கருவியானது வாடிக்கையாளர்களின் வேறுபட்ட தேவைக்கேற்றால் போன்று அமைக்கக்கூடிய விதத்தில் இருப்பது அதன் தனித்துவமான பண்பாகும். இந்த சேய்மை மின்வலியளவு தரவு உட்பதிகை கருவியானது, துல்லியமான அளவீடுகளுக்கான பொறிமுறை, தரவு சேமிப்பக வசதிகள், சேய்மை முறையின் மூலம் தரவுகளை மீண்டும் பெற்றுக்கொள்ளுதல், சாராமாறிகளினை அமைத்தல் மற்றும் ஒரு தனித்துவமான தொடர்பாடல் கருவியாகவும் செயற்படுகிறது.



இதன் மூலவகை மாதிரியானது பூரணப்படுத்தப்பட்டு அரசபாலனை ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

6.0 ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

6.1 கைத்தொழிற்துறை - எந்திரவியலில் தொடங்கப்பட்ட ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகள்

வரை. பயோ-மெட் சர்வதேச (தனியார்) நிறுவகத்துடன் தன்னியக்க வைத்தியசாலை கட்டில்

இந்த கருத்திட்டமானது, வைத்தியசாலைகளில் சாதாரணமாக பயன்படுத்தப்படும் கட்டில்களை, சாதாரணமாக மட்டுப்படுத்தப்பட்டதொரு கிரயச் செலவினத்தில் தன்னியக்க கட்டில்களாக்குதல் ஆகும். இது ஒரு நோயாளியினை பராமரிப்பதற்கு வைத்தியசாலையின் அலுவலர்களுக்கு ஏற்படக்கூடிய சிரமத்தை குறைப்பதற்கு உதவும். இந்த தன்னியக்கமாக இயங்கக்கூடிய கட்டில் கருத்திட்டம் தொடர்பில் வரை. பயோ-மெட் சர்வதேச (தனியார்) நிறுவகத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.



இலங்கை விமான சேவைக்கு இரு கைத்தொழிற்துறை சுவர்க் கடிகாரங்கள்

இக் கருத்திட்டமானது, 02 LED கைத்தொழிற்துறை சுவர்க் கடிகாரங்களை இலங்கை விமானச் சேவைக்கு வடிவமைத்து விருத்தி செய்து வழங்குதல் ஆகும்.



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு பலகம் காட்சிப்படுத்துகை

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு 02 பலகம் காட்சிப்படுத்துகைகள் வழங்கப்பட்டன.



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு ஒரு CCTV பாதுகாப்பு கண்காணிப்பு முறைமையொன்றின் விருத்தி

இந்தக் கருத்திட்டமானது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினது, அம்பத்தலே, பியகம, தலாவல மற்றும் இரத்மலானை ஆகிய இடங்களில் நான்கு CCTV கண்காணிப்பு முறையினை விருத்தி செய்து வடிவமைத்து தாபித்தலாகும். இரத்மலானை மற்றும் தலாவெல ஆகிய இடங்களில் இந்த CCTV தாபிக்கும் பணியானது மேலதிக கருத்திட்ட விஸ்தரிப்புடன் (மேலதிகமாக PTZ நிழற்பதிவு பெட்டிகளை நிறுவுதல்) பூர்த்தியாகி உள்ளதுடன் ஏனைய இரு இடங்களிலும் தாபிக்கும் பணியில் 90% மான வேலை பூரணமாகியுள்ளது. இந்தக் கருத்திட்டமானது, நிறுவகத்தின் தொடர்பாடல் பிரிவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

என்ரொய்ட் பிரயோகம் என்றவகையில் ஒரு புற்று நோய் பராமரிப்பு முறையினை விருத்தி செய்தல்



சுகாதார நலனை நோக்காகக் கொண்ட இந்த பிரயோகத்திலிருந்து கிடைக்கப்பெறும் அனுகூலங்கள், தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய நோய் பராமரிப்புகள் மற்றும் சிகிச்சையளிப்பு திட்டங்களுக்கு உதவியாக அமையும். இந்தக் கருத்திட்டமானது களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துடனும் மற்றும் வரை. மொபிடெல் (தனியார்) நிறுவகத்துடனும் கூட்டிணைந்து செய்யப்படுகிறது. கருத்திட்டத்தின் விருத்தி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

6.2 எந்திரவியலில் அக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்கள்

பூமத்திய ரேகை மண்டல நாடுகளுக்கு பொருத்தமான உயர் செயலாற்றுகை எழுச்சி காப்பு ஒன்றினை விருத்தி செய்தல்





இந்தக் கருத்திட்டமானது, வெளியிலிருந்து வரக்கூடிய எழுச்சிகளினால் தாக்க மடையக்கூடிய மின்னணுவியல் முறைமைகளினை பாதுகாப்பதற்கு, குறிப்பாக இலங்கையைப் போன்ற பூமத்திய ரேகை நாடுகளுக்கு பொருத்தமாக ஒரு உயர் செயலாற்றுகை எழுச்சி காப்பு ஒன்றினை வடிவமைத்து விருத்தி செய்தலாகும். இதன் தொடர்பில் மூலவகை மாதிரி விருத்தி செய்யப்பட்டுள்ளதுடன், வேறுபட்ட நிலைமைகளுக்கு ஏற்றதா என கண்டறிய ஆய்வுகூட பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (வேறுபட்ட நிலைமைகள் தொடர்பில் மூலவகை மாதிரிகளை ஆய்வுகூடம் பரிசோதனை செய்கின்றது).

தூய வெளி வலயத்தின் மீதான வலு



இந்தக் கருத்திட்டமானது, மின்கல இருப்பு மற்றும் அதன் நிலைப்பாடு என்பனவற்றை காட்டுவதற்கு மின்கலமானது தன்னியக்கமாகவே கண்காணிக்கப்படுதற்கு ஒரு தூய வெளி வலயத்தினை அடிப்படையாகக்கொண்ட காட்சியக முறையினை வடிவமைத்தலாகும்.

நான்கு இணைவுகளுடன் பறக்கும் ஒரு கருவி (Quadrotor vehicle - Drone) இனை வடிவமைத்து விருத்தி செய்தல்



நிறுவகத்தின் தொடர்பாடல் பிரிவானது மனித எந்திரவியல் ஆய்வுகூடமானது, அக அடிப்படையில் கிடைக்கப்பெறக் கூடியதாகவுள்ள தொழில்நுட்பங்களின் துணையுடன் ஒரு பறக்கும் இயந்திரத்தை வடிவமைத்து – இதன் பறக்கும் நிலையானது நிறுவகத்திற்கு அக அடிப்படையில் பரிசோதிக்கப்பட்டது. இந்த தொழில்நுட்பத்தின் உதவியுடன் ஒரு அறுகோண இணைவுகளுடன் கூடிய ஒரு பறக்கும் கருவியினை நிலத்தை அளப்பதற்கும் மற்றும் அதற்கு தேவையான உபகரணங்களை கொண்டுசெல்வதற்கும் வடிவமைத்தற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தேயிலையின் நிற வகுப்படுத்தல் முறைமை

தேயிலை செயன்முறையாக்கத்தின் இறுதிக் கட்டத்தில், அதன் நிறத்தின் அடிப்படையில் தேயிலையை பிரிப்பதற்கு குறைந்த செலவினத்தில் ஒரு கருவியினை வடிவமைப்பதே இந்த கருத்திட்டத்தின் நோக்காகும் என்பதுடன் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகமானது, குறைந்த மட்டத்தில் தேயிலை செயன்முறையாக்கத்தில் ஈடுபட்டுள்ள தேயிலை ஆணையாளர்களின் கோரிக்கைக்கு அமைவுற இந்த கருவியானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கருவி தொடர்பிலான கருதுகோளை உறுதிப்படுத்துவதற்குரிய மாதிரி தயாரிக்கப்படலிற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இக்கட்டமானது வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கிற்கு தொழில்நுட்பவியல் மாற்றீடும் பூர்த்தியடைந்தது. FPGA யினை அடிப்படையாகக்கொண்ட மின்னணுவியல் முறைமையின் விருத்தியின் அடுத்த கட்டமானது அடுத்த வருடம் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.



வாகனத் தொகுதிகளை சுவடு காணலும் தகவல் உட்புகுகை முறைமையும்



இது ஒரு அக கருத்திட்டமாக தொடங்கப்பட்டதுடன், அதன்பின் வாகளங்களை முகாமைத்துவம் செய்வதற்கு பயனுறுதி மிக்கதொரு முறை என்ற வகையில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலையுடன் இணைந்து இக் கருத்திட்டம் தொடரப்பட்டது. இந்த முறைமையின் கீழ், வாகனம் செயற்படும் இடம் காட்டப்படுவதுடன், முகாமைத்துவத்தின் கோரிக்கைக்கு ஏற்ப அது தொடர்பில் அறிக்கையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். இதன் மூலவகை மாதிரி சோதனைக் கட்டத்தில் இதன் தொடர்பிலான தரவுத்தள முகாமைத்துவத்திற்குரிய மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய நடவடிக்கைகளுக்குரிய வன்பொருள் மற்றும் மென்பொருள்களாக விருத்தி செய்யப்பட்டுள்ளது. வாகனங்களில் இந்த முறைமையினை நிறுவுதலானது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகிறது.

RF-ID யினை பயன்படுத்தி நூலகத்தின் செயன்முறையினை தன்னியக்கவாக்கம் செய்தல் தொடரப்படல்



நூலக செயற்பாடுகளை தன்னியக்கவாக்கம் செய்வதற்கு, புத்தகங்கள் மற்றும் பயன்படுத்தப் படுபவைக்கு RF-ID தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட குறியிடல் முறை பின்பற்றப்படுகிறது. இந்த நூலக செயற்பாட்டு முறைமைக்கு தேவைப்படக்கூடிய குறியீடு வாசிப்பு கருவிக்கும் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமைக்குரிய மென்பொருளும் இந்த முறைமையுடன் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. இந்த முறைமையானது முன்னோடி சோதனை மட்டத்தில் பூரணப்படுத்தப் பட்டுள்ளதுடன் தற்போது நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கில் நிறுவப்பட்டுள்ளது. அத்துடன் முறைமை தரவுகள் புகுத்தப்படலானது நடைமுறையிலுள்ளது.

வலு மின்னணுவியல் அளவீட்டு ஆய்வுகூடத்தை மேம்படுத்துதல் – ஆளிகள் / பிளக்குகள் / சொக்கட்டுகள் ஆகியவற்றை சோதிப்பதற்கான வசதிகளினை மேம்படுத்துதல்

ஆளிகளினை பரிசோதிப்பதற்கான ஒரு பொறிமுறையினை மின்னணுவியல் பிரிவு SLS1000 இற்கு அமைவுற வடிவமைத்து விருத்தி செய்தது. (தயாரிப்பு, உடைவு செயற்றிறன் வழமையான செயற்பாடு மற்றும் வெப்பநிலை அதிகரிப்பு என்பனவற்றிற்கான பரிசோதனை.




மேலும் 5A,13A,15A என்பனவற்றினது எந்திர வலுவினை பரிசோதிப்பதற்கு SLS 734 மற்றும் SLS 948 இற்கு அமைவுற உருள் பீப்பா (tumbling burrel) ஒன்று நிர்மாணிக்கப்பட்டது.

6.3 வானியலாராய்ச்சியில் அக ஆராய்ச்சி கருத்திட்டங்கள்


பல வண்ண ஒளிமானி மற்றும் உயர் பிரிகைகளினைக் கொண்ட நிறமாலைமானி என்பனவற்றை பயன்படுத்தி ஸ்கூடி வகையினைச் சார்ந்த விண்மீன்களின் அலைவு நோக்கி முறையினை இனம் காணல்

டெல்டா ஸ்கூடி விண்மீன்களாவன, நிறமாலை வகை A யிலிருந்து F இன் முற்பகுதி வரையிலுமுள்ள ஒளிர்திறன் வகுப்புகள் V தொடங்கி III வரைக்கும் இணைத்துக்கொண்டதாகவிருக்கும் மாறும் தன்மை கொண்ட துடிப்பு விண்மீன்களாகும். டெல்டா ஸ்கூடி விண்மீன்களாவன SZ Lyn (HD 67390) BVR ஒளிமானியில் அவதானிக்கப்பட்டது. ஒளி வளைவுகள் பெறப்பட்டன. அடிப்படை அலைவு நோக்கி காலமானது 0.120 ±0.003 நாட்கள் என துணிவு செய்யப்பட்டது. ஏனைய அலைவு நோக்கி முறைகளினை அவதானிப்பதற்கு போரியர் பிரிகை முன்னெடுக்கப்பட்டது. ஆராய்ச்சிக் கட்டுரை எழுதப்படுகிறது.






A displacement field with l=2 and m=0.




A displacement field with l=5 and m=3.


1a வகையினைச் சார்ந்த சுபர் நோவாவிடமிருந்து விண்மீன் திரள் தூசு அழிவினை பரீட்சித்தல்

வகை 1a சுபர் நோவாவினை, விண்மீன் திரள்களின் தூசு அழிவினை மதிப்பீடு செய்வதற்கு பயன்படுத்தலாம். 1a சுபர் நோவாவினைச் சார்ந்த, மாதிரி வகைகள் 20-25 ஆனது, கானஜி மெலன் சுபர் நோவோ எறியத்தின் மூலம் அவதானிக்கப்பட்டதுடன் இதனை இக் கருத்திட்டம் தொடர்பில் பயன்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. B மற்றும் V பட்டை வகையினைச் சார்ந்த ஒளி வளைவுகள் பொருத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. ஆராய்ச்சிக் கட்டுரை எழுதப்படுகின்றது.





நாசாவின் “கெல்பர்” பணியின் மூலம் கைப்பற்றப்பட்ட விஞ்ஞான தரவுகளை பயன்படுத்தல்



நாசாவின் கெல்பர் மற்றும் K2 ஆனது, வெளிகோள்கள் மற்றும் வான் பௌதிகவியல் ஆராய்ச்சிகளுக்கு நீளமான – அடிப்படை வரிகளையும் மற்றும் உயர் துல்லியத்துடன் கணிக்கக்கூடிய ஒளிமானியினையையும் தரும். இத் தரவுகளாவன இறக்கம் செய்யப்பட்டு பெடோரா தொழிற்பாட்டு முறைமையில் நிறுவப்பட்டது.
“மாறும் தன்மை கொண்ட டெல்டா ஸ்கூடி நட்சத்திரங்களின் வானியல் நிலநடுக்கம் கெல்பர் 2 ஒ ளிமானி தரவுகளை பயன்படுத்தி தேன்கூடுகள்” பற்றிய ஆராய்ச்சியானது பூரணப்படுத்தப்பட்டது

வானியலாராய்ச்சியில் கூட்டிணைந்த பட்டப்பயிலுகை மட்ட ஆராய்ச்சி த்திட்டங்கள்

டெல்டா ஸ்கூட்டி வகையினை சார்ந்த விண்மீன்கள் பற்றிய ஆய்வு (பேராதெனிய பல்கலைக்கழகத்துடன் கூட்டிணைவு ஆராய்ச்சி)

இந்தியாவில் குருஷிகார் எனுமிடத்திலுள்ள மௌன்ட் அபு வானியல் ஆய்வுகூடத்தில் 1.2 m கெசிகிராம் தொலைநோக்குக் காட்டியினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்ட ஒளி அளவை தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. விண்மீனின் சராசரி அடர்த்தியும் துடிப்பின் இசைவாக்கமும் துணிபு





Figure 18: The periodogram of KP Cnc.

செய்யப்பட்டது. ஆய்வுக் கட்டுரையானது பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

தொலைநோக்குக் காட்டி அறை மீளக் கட்டியமைத்தல்

இலங்கையிலேயே அதி பெரிய தொலைநோக்குக் காட்டியான 45 செ.மீ. தொலைநோக்குக் காட்டியினை கொண்டுள்ள தொலைநோக்குக் காட்டி அறையானது நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர். சி. கிளார்க் நிலையத்தில் இருப்பதுடன் இந்த தொலைநோக்குக் காட்டி அறையானது 2016 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டது. MS DOS இனை அடிப்படையாகக்கொண்ட தொலைநோக்குக் காட்டி கட்டுப்படுத்தி நிகழ்ச்சித்திட்டமானது மீள் நிறுவுகை செய்யப்பட்டது. PLC இனை அடிப்படையாகக்கொண்ட தள்ளல் கூரைக்கான கட்டுப்படுத்தியும் மற்றும் தள்ளல் கூரையின் அமைப்பின் காரணமாக தொலைநோக்குக் காட்டி இடிபட்டு பாதிப்புறாமல் இருப்பதற்கு தள்ளல் கூரையும் மிள்வடிவமைப்பு செய்யப்பட்டு நிறுவப்பட்டது.




6.4 விண்வெளி தொழில்நுட்ப பிரயோகத்தில் ஆராய்ச்சி

இலங்கையில் பாரம்பரிய நெல் வகைகளில் நிறமாலை பண்பியற் கூறுகளை மதிப்பிடல்

அநேகமான ஆய்வுகளாவன, நிறமாலை சுட்டிகள் மற்றும் தாவர உயிர் பௌதிகவியல் அத்துடன் கட்டமைப்பு இயல்புகள் என்பனவற்றிற்கிடையிலான தொடர்பிணைப்பை மதிப்பீடு செய்வதில் தனது அவதானத்தை செலுத்தியுள்ளது. வேறுபட்ட அலைநீளத்துடன் கூடிய தாவரங்களின் நிறமாலை பண்பியற் கூறுகளாவன இலையின் உள்ளக மற்றும் உயிரணுக்குள்ளே உயிரணு கட்டமைப்பு, அத்தோடு பச்சையம், கரோட்டின் நிறப்பொருள், நைதரசன் போன்ற உயிர் இரசாயன உட்கூறு அத்துடன் நீர் என்பனவற்றினால் ஆளுமை செய்யப்படுகிறது. நெல் வகைகளின் நிறமாலை பண்பியற் கூறுகளை மதிப்பிடுதற்கு இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. ஒரு கள நிறமாலைமானியினை பயன்படுத்தி 320 –1100 nm அளவில் இயற்கையான ஒளி மற்றும் சூழல் நிபந்தனைகளின் கீழ் நிறமாலை பண்பியற் கூறு அளவீடுகள் முன்னெடுக்கப்பட்டதுடன், 22 வகையான மரபு ரீதியிலான நெல் வகைகள் தொடர்பில் அநேகமான மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் வயம்ப சர்வதேச மாநாட்டில் (WinC 2016) ஒரு ஆராய்ச்சி கட்டுரையானது பிரசுரிக்கப்பட்டது.

தொல்பொருளாராய்ச்சி திணைக்களத்துடன் கூட்டிணைந்து, மனிதர்களின் வழிநடத்தல் அற்ற வானூர்தி ஒன்றினை பயன்படுத்துவதன் மூலம் (UAV) தொல்பொருள் ஆய்வுகள் மற்றும் அகழ்வுகளுக்கு வானூர்தி ஒ ளிப்பட அளவியல்களை பயன்படுத்தல்





இலங்கையானது பூமத்திய ரேகைக்கு அண்மித்ததாக அமைந்துள்ளதால், அது மேகக் கூட்டங்களை அதிகமாக கொண்டுள்ள காரணத்தினால், மேகக் கூட்டங்களால் மூடப்படாத தெளிவான விம்பங்களை பெற்றுக்கொள்ளல் கடினமானதொரு விடயமாகும். பொதுவாக UAV ஆனது மேகக் கூட்டத்தின் மட்டத்தினைவிட தாழ்வாகவே பறக்கும் என்பதினால், வானூர்தி மூலம் விம்பவாக்கத்தை பயனுறுதி மிகுந்த வகையில் பெற்றுக்கொள்ளலாம். அவைகளுக்கு இன்னும் தாழ்வாக அதாவது 100 m இற்கும் தாழ்வாக பறக்க முடியும் என்பதால் உயர் பிரிகையடுப்பு விம்பங்களையும் (2 செ.மீ. இனைவிட குறைவாக) பெற்றுக்கொள்ளலாம். வானூர்தி விம்பவாக்கல் தீர்வு முறைகளாவன அளவளாய்வுகளினை செய்வதற்கும் மற்றும் வேறுபட்ட பிரயோகங்களின் நிமித்தம் ஒரு பாதுகாப்பான பிரதேசத்திலிருந்து ஒரு குறுகிய காலத்தில் (ஒரு மணித்தியாலத்திற்கும் குறைவான காலப்பகுதியில்) அதீதமான அளவில் தரவுகளை சேகரித்துக்கொள்ளவும் புவி வெளியிடை சார்ந்த தொழில்சார்பியலாளருக்கு உதவுகின்றது. தொல்பொருளாராய்ச்சிகள் செய்யப்படுவதற்குள்ள பிரதேசங்களில் விம்பலாக்கங்களை மேற்கொள்வதற்கு வானூர்தி விம்பலாக்கம் ஒன்று இருப்பதற்கான அவசியத்தன்மையினை தொல்பொருளாராய்ச்சி திணைக்களம் ஏற்கனவே தெரியப்படுத்தியுள்ளது.

வானூர்தி ஆனது கொள்முதல் செய்யப்பட்டது. வழங்கப்படவுள்ள பொருளானது ஆய்வு செய்யப்பட்டு விமானத்தின் பயண திட்டமிடுகை மற்றும் தொழில்நுட்பவியல் சார்ந்த விடயங்களுடன் பரிச்சயப்படச் செய்யப்பட்டது. பரீட்சார்ந்த அடிப்படையில் ஒரு பயணம் முன்னெடுக்கப்பட்டது.

6.5 பிரசுரிப்புகள்

1) “உண்மையான RMS மின்வலியளவு பதிவியினை மேம்படுத்துதல்”: ஜெ.பீ.டி.எஸ். அதுரலிய, என்.எல். ரத்னாயக்க, என்.ஏ.ஏ.என். டில்ருக்ஷி, பீ. மஹாதேவன், ரி.எம்.எஸ். டயஸ், எஸ்.ஆர்,ஜே.எஸ். பண்டார, சி.டி. பனமல்தெனிய: இலங்கை எந்திரவியலாளர் நிறுவகத்தின் வருடாந்த கொடுக்கல் வாங்கல்கள் – 2016.

2) “இலங்கையில் பாரம்பரிய நெல் வகைகளின் நிறமாலை பண்புகளை மதிப்பீடு செய்தல்”: மாரசிங்க பி.எஸ்., பொன்சேக்கா எச்.பீ.யூ., ஜயவர்தன டபிள்யு.ஜீ.என்.என்., மொஹமட் ரிலா ஏ.ஆர்.ஆர்., ரத்னாயக்க டபிள்யூ.எம்.யூ.கே., சிரிசேன, டி.என்., பெந்தொட்ட ஏ.பீ.
Win C 2016 இலங்கை வயம்ப பல்கலைக்கழகம், வயம்ப சர்வதேச மாநாடு.

6.6 சோதனை மற்றும் அளவீடுகள், வன்பொருள் திருத்துகை மற்றும் உசாவுத்துறை சேவைகள்

வலு மின்னணுவியல் அளவீட்டு ஆய்வுகூடத்தின் சோதனை மற்றும் அளவீட்டு சேவைகள் மின்னணுவியல் மற்றும் நுண்மின்னணுவியல் பிரிவு



வருடகாலப்பகுதியில் பிரிவானது 215 செயலாற்றுகை சோதனை அறிக்கைகளை குறிப்பாக, மின்கல சோதனைகள், எழுச்சி பாதுகாப்பு உபகரணங்கள் (SPDகள்), மின்சுற்று உடைவுகள் (RCCBகள்), மினியேச்சர் சுற்று உடைவுகள் (MCBகள்), பிளக்குகள், சொக்கட்டுகள், ஆளிகள், LTEகள், PSTN தொலைபேசிகள் மற்றும் ரவுட்டர்கள் ஆகியவை தொடர்பில் முன்னெடுத்தன. இதைவிட பிரிவானது, வாடிக்கையாளர் இடங்களில் வலு தர அளவீடுகளை முன்னெடுத்ததுடன், பாதுகாப்பு சோதனைகள் மின்னியல் மற்றும் மின்னணுவியல் உற்பத்திகளில் வலு தர அளவீடுகளையும் பிரிவு முன்னெடுத்தது.

பிரதான வாடிக்கையாளர்கள் எனும்போது அவர்களுக்குள், ஒரல் கூட்டுத்தாபனம், மைக்ரோ பவர் என்ஜினியரிங், இலங்கை தொலை தொடர்பாடல், வரை. கெவில்டன் மின் உற்பத்திகள் தனியார் நிறுவகம், வரை. சொவ்ட் லொஜிக் ஹோல்டிங்ஸ் தனியார் நிறுவகம், இலங்கை கட்டளைகள் நிறுவகம், வரை. டீசல் மற்றும் மோட்டார் என்ஜினியரிங், மின்கல உற்பத்தியாளர் சங்கம் போன்ற இதர பல உள்ளடங்கும்.

மின்னணுவியல் மற்றும் நுண்மின்னணுவியல் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட தொல்லை வீழ்த்தல் / திருத்தற் சேவைகள் மற்றும் உசாவுத்துணை ஒப்படைப்புகள்

மீளாய்வுக்குட்பட்ட வருட காலப்பகுதியில் மின்னணுவியல் மற்றும் நுண்மின்னணுவியல் பிரிவினால், பிரதான உசாவுத்துணை மற்றும் வன்பொருள் திருத்தல் ஒப்படைப்புகள் 52 பிரிவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

பிரதானமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வன்பொருள் திருத்தற் ஒப்படைப்புகள் எனும்போது அதற்குள், வரை. பிரண்டிக்ஸ் ஆடைக் கைத்தொழிற்துறை நிறுவகத்திற்காக, பாரம் நகர்த்தும்

இயந்திரம் இரண்டினது ஏற்றம் சுற்றமைப்பு அட்டைகளை திருத்துதல், இரத்மலானையிலுள்ள தொழில்நுட்பவியல் கல்லூரிக்காக அலைவு நோக்கி ஒன்றினை திருத்துதல், வரை. ஆய்வுகூட கருவிகள் கம்பனிக்காக அலைவு நோக்கி ஒன்றினை திருத்துதல், ஒளியியல் இழை கடத்து கருவி திருத்துகை, அலைவு நோக்கிகள் வலு விநியோகிப்பு மற்றும் ருஹுணு பல்கலைக்கழகத்திற்கான செயற்பாடு பிறப்பாக்கிகள் என்பவை உள்ளடங்கும்.

தொடர்பாடல் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட சோதனை மற்றும் அளவீடுகள், வன்பொருள் திருத்துகை மற்றும் உசாவுத்துணை சேவைகள்

சோதனை மற்றும் அளவீட்டு சேவைகளின் கீழ் லக்விரு வானொலி, வரை. கணனி கேபிள் (தனியார்) நிறுவகம் வரை. செடார் இன்டர்நெஷனல் தனியார் நிறுவகம், விஷேட சிறப்பு படையணி, மக்கள் வங்கி, வரை. IE டெக்னிக்ஸ் (தனியார்) நிறுவகம் ஆகியோருக்காக வானொலி அதிர்வெண்ணுடன் தொடர்புடையதும் வடகம் பண்பியற் கூறு அளவீடுகள் பற்றிய பணிகள், மற்றும் இவற்றுடன் தொடர்புடைய பரப்பெல்லைகளிலும் 05 விஷேட உசாவுத்துணைகள் முன்னெடுக்கப்பட்டன.

கைத்தொழிற்துறை சேவை பிரிவின் தரங்கணிப்பு ஆய்வுகூடத்தினால் வழங்கப்பட்ட கருவி தரங்கணிப்பு சேவைகள் / செயலாற்றுகை சோதனை சேவைகள்



வருட காலப்பகுதியில் கருவி தரங்கணிப்பு சேவைகள், குறிப்பாக மின்னணுவியல் மற்றும் மின்னியல் சோதனை கருவிகளில் முன்னெடுக்கப்பட்டதுடன் கைத்தொழிற் துறையாளர்களின் கோரிக்கைக்கு அமைவுற வேறுபட்ட வகையான சோதனை கருவிகளின் மீது 103 தரங்கணிப்பு அறிக்கைகளும் வழங்கப்பட்டன. தரங்கணிப்பு செய்யப்பட்ட கருவிகள் எனும்போது அதற்குள், டிஜிட்டல் / ஒத்திசை பல்மானிகள், அலைவு நோக்கிகள், AC/DC படிமானிகள், உயர் மின்வலியளவு சோதிப்பிகள், ஹிப்பொட் சோதிப்பிகள், செயன்முறை மானிகள், வலு பகுப்பாய்விகள், வாட் மானிகள், மின்வலியளவு மானிகள், வலு தர பகுப்பாய்வி, தூக்கிச் செல்லத்தக்க கருவிகளினை சோதிக்கும் கருவி, புவி சோதிப்பிகள், RCCB சோதிப்பிகள் மற்றும் லூப் சோதிப்பிகள் என்பன உள்ளடங்கும்.

எமது பிரதான வாடிக்கையாளர்களுக்குள், எஸ்.ஜி.எஸ் லங்கா, வரை. லங்கா டிரான்போமர்ஸ், கொஹொகு லங்கா, இலங்கை கடற்படை, வினோரா இன்டர்னெஷனல் மற்றும் வரை. டேவிட் பீரிஸ் கம்பனி என்பன உள்ளடங்கும்.

LMS ஆய்வுகூடத்தினால் வழங்கப்படும் ஒளி அளவீட்டு சேவைகள் - கைத்தொழில் சேவைகள் பிரிவு

CFL மின்குமிழ்கள் மற்றும் LED மின்குமிழ்களை பரிசோதிப்பதற்கான ஒளி அளவீட்டு சேவையானது வருடம்தோறும் முன்னெடுக்கப்பட்டதுடன், இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் கூட்டிணைவுடன் 90 சோதனை அறிக்கைகள் வெளிவிடப்பட்டன. எமது பிரதான வாடிக்கையாளர், வரை கெவில்டன் மின்னியல் உற்பத்தி (தனியார்) நிறுவகம், ஒரல் கூட்டுத்தாபனம் மற்றும் பிலிப்ஸ் லைட்டிங் லங்கா ஆகும்.

உத்தரவாதம் பேணுகை மற்றும் ஒப்பற்ற சேவைகள்

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் அரச பயன்பாட்டு ஆணைக்குழுவிற்காக உண்மையான RMS மின்வலியளவு பதிவி 05 வடிவமைக்கப்பட்டு விருத்தி செய்யப்பட்டது. இது சிறப்பாக செயற்படுவதற்கு சிறந்த முறையில் பராமரிப்பு செய்யப்பட்டது.



தரவுத்தளம் மற்றும் ஏனைய தகவல் முறைமைகளின் ஒப்பற்ற சேவைகள்

கணக்கியல் முறைமை – மொறட்டுவ பல்கலைக்கழகம்
கணக்கியல் முறைமை – ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
சம்பளப் பட்டியல் முறைமை – அபிவிருத்தி லொத்தர் சபை
கணக்கியல் முறைமை – பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம்

7.0 பயிற்சி, கல்வி மற்றும் தகவல்களை பரப்புதல்

7.1 தொழில்சார்பியலாளருக்காக தொடர் தொழில்சார் அபிவிருத்தி (CPD) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

நவீன வலு மின்னணுவியல்

26 பங்கு பெறுனர்களுக்காக ஒரு தொடர் தொழில்சார் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டதுடன், அதன் மூலம் பெற்ற வருமானம் ரூபாய் 273,000/= ஆகும். பங்குபெறுனர்களுக்கு, நவீன வலு மின்னணுவியல் தொடர்பில் புவி தடுப்பு அளவீடுகள், வலு தர பகுப்பாய்வியும் ஒத்திசைவுகளும், ஆளியின் மூலம் வலு விநியோகம், ஆக்கக்கூறுகளின் பண்பியற் கூறுகள், மின்கலங்கள் மற்றும் UPS போன்ற இதர பலவற்றினை பற்றிய அறிவு மற்றும் அவற்றை பயன்படுத்துதல் தொடர்பில் செயல்முறைசார் அனுபவம், பிரயோகம் அதன் அனுகூலங்கள் மற்றும் அவற்றின் வரையறைகள் என்பவை தொடர்பில் விளக்கங்கள் வழங்கப்பட்டன.

நவீன மின்னணுவியல் ஆக்கக்கூறுகள்

22 பங்குபெறுனர்களுக்காக ஒரு தொடர் தொழில்சார் அபிவிருத்தி கற்கைநெறி நடாத்தப்பட்டு ரூபாய் 341,000/= வருமானமாக உழைக்கப்பட்டது. பங்குபெறுனர்களுக்கு ஒத்திசைவு மற்றும் டிஜிட்டல் சார்ந்த நவீன மின்னணுவியல் ஆக்கக்கூறுகள் பற்றிய அறிவும் செயல்முறைசார் அனுபவமும் வழங்கப்பட்டதுடன் தரவு மாற்றுகை ஆக்கக்கூறுகள் பற்றிய அறிவும் வழங்கப்பட்டது.

ஒளி வழங்கல் மற்றும் எழுச்சி காப்பு முறைமை வடிவமைப்பு

இந்த தொடர் தொழில்சார் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது, கைத்தொழிற்துறைசார் பங்குபெறுனர்களுக்கும் அதுபோன்று நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவக தொழில்நுட்பவியல் பதவிநிலை உறுப்பினர்களுக்கும் மின்னணுவியல் எந்திரவியல் துறையில் கூட்டிணைவு பேராசிரியரான நிஹால் குலரட்ன அவர்களால் முன்னெடுக்கப்பட்டதுடன் இவர், நியூசிலாந்திலுள்ள வய்காட்டோ பல்கலைக்கழகத்துடன் இணைந்தவராவார். இந்த நிகழ்ச்சித்திட்டமானது வெளிவாரி பங்குபெறுனர்களுக்கு ஒரு சாதாரண கட்டணத்திற்கு வழங்கப்படுவதுடன் நிறுவகமானது, இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 14 பங்குபெறுனர்களிடமிருந்து ரூபாய் 56,000/= இனை வருமானமாக உழைத்தது.

இந்த நிகழ்ச்சித்திட்டமானது, குறைந்த மின்வலியளவு முறைமைக்கு ஏற்புடைய எழுச்சி பாதுகாப்பு முறைமைகள் பற்றி கூறுவதாகும். மேலும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முழு மொத்த அறிமுகப்படுத்துகை உரையானது, இவ் விடயத்துடன் தொடர்புடைய கோட்பாடு ரீதியிலான விளக்கங்கள், ஏற்புடைய தொழில்நுட்பங்கள், சம்பந்தப்பட்ட சர்வதேச கட்டளைகள், கிடைக்கக்கூடியதாகவுள்ள தொழில்நுட்பங்கள் மற்றும் கைத்தொழிற்துறைசார் செயல்முறைகள், அதி நவீன தொழில்நுட்பவியல் முறைகள் பற்றிய சுருக்கம், எதிர்கால நெறிப்படுத்துகைகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட ஒரு தொகுதி ஆராய்ச்சி நூல்களினை அடிப்படையாகக்கொண்டதாக அமைகிறது.

உட்பதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு முறைமை

இரண்டு தொடர் தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களாவன 43 பங்குபெறுனர்களுக்கு குறிப்பாக கைத்தொழிற்துறையை சார்ந்தோருக்காக நடாத்தப்பட்டது.

செய்நிரற்படுத்தத்தக்க சுருக்க கட்டுப்படுத்தி

S7-200 PLC பற்றிய ஐந்து நாட்களைக் கொண்ட இரு தொடர் தொழில்சார் அபிவிருத்தி கற்கைநெறியானது, கைத்தொழிற்துறையினையையும் மற்றும் ஏனைய நிறுவகங்களினையையும் சார்ந்த தொழில்நுட்பவியல் முகாமையாளர்கள், எந்திரிகள், தொழில்நுட்பவியல் அலுவலர்கள் ஆகியோருக்கும் மற்றும் பட்டப்படிப்பு மாணவர்களுக்காகவும் நடாத்தப்பட்டது. பிரதானமாக பங்குபற்றிய நிறுவகங்கள் எனும்போது அதற்குள், இலங்கை மின்சார சபை, விமானத்தளம் மற்றும் விமான சேவைகள், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம், கொழும்பு டொக்யாட், கைத்தொழில் அபிவிருத்தி சபை, ஜேர்மன் புகையிரத சேவை, தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் மற்றும் வரை. ரெஜின்ஸ் லங்கா (தனியார்) நிறுவகம் என்பன ஆகும்.

7.2 அடிப்படை மற்றும் இடைநிலை தொழில்நுட்பவியல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

பட்டப்பயிலும் மாணவர்களுக்கான வானியல் குறைப்பு பற்றிய பயிற்சிப் பட்டறை

அக பல்கலைக்கழகங்களைச் சார்ந்த 25 பட்டப்பயிலும் மாணவர்களுக்காக, வானியல் தரவு குறைப்பு பற்றிய இரு நாட்களைக் கொண்ட பயிற்சிப்பட்டறை இடம்பெற்றது. இந்த பயிற்சிப் பட்டறையின்போது, இதன் வள ஆளணியாக ஐக்கிய அமெரிக்க அரசினைச் சார்ந்த கோள் விஞ்ஞான நிறுவகத்தின் சிரேட்ட ஆராய்ச்சி விஞ்ஞானி கலாநிதி. நளின் சமரசிங்க அவர்கள் கலந்துகொண்டார்.

7.3 விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பிரபல்யப்படுத்துகையும் தகவல்களை பரப்புதலும்

நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நூலகம்

நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நூலகமானது தொழில்நுட்பவியல் துறையில் அதி சிறந்த தகவல்களை வழங்கும், உயர்தரமான தொழில்நுட்பவியல் நூலகங்களில் ஒன்றென கணிப்பீடு செய்யப்பட்டதொன்றாகும் என்பதுடன் அது தொடர்பாடல், தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல், ஒளிப்படவியல், மனித எந்திரவியல் மற்றும் விண்வெளி தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் கணிசமான அளவு புத்தாக்கங்களையும் பருவ சஞ்சிகைகளையும் மற்றும் ஏனைய கல்வியியல் சாதனங்களையும் கொண்டுள்ளது.

இந்த நூலகத்தின் குறிக்கோளானது தொழில்சார்பியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி கருத்திட்டங்களில் ஈடுபட்டுள்ள தனிப்பட்ட ஆளணியினர், பட்டதாரிகள் மற்றும் பட்டப்பின் பட்டதாரிகள் என்போருக்கு தகவல்களை வழங்குதலும் அவற்றை பெற்றுக்கொள்வதற்கு துணையாக இருத்தலுமாகும்.

நூலக சேகரிப்புக்கள்

வருமானங்களை கணக்கீடு செய்யும் போது அட்டுறு முறையினை கடைபிடித்தல் நிறுவனத்தின் கணக்கீட்டு கொள்கை என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும், உத்தியோகத்தர்களுக்கு விநியோகிப்பதில் அடங்கும் 19 வருமான கருத்திட்டங்கள் தொடர்பாக 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது இண்வொயிஸ் பண்ணப்பட்ட கூட்டுதொகை ரூபா 1,504,800 இற்கான வருமானம் குறிப்பிட்ட ஆண்டுகளுக்கான செயலாற்றுகைக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு பதிலாக, பிற்போடப்பட்ட வருமானங்கள் என நிதி நிலைமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

2.23 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது அகற்றப்பட்ட ரூபா 453,295 தொகை கிரயத்தையுடைய அலுவலக உபகரணங்களின் திரண்ட பெறுமானத் தேய்வு ஒதுக்கம் ரூபா 91,637 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்த காரணத்தினால் பண்ட விற்பனவு மூலம் இலாபம் ரூபா 91,637 தொகை மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்குச் சேவைகள் வழங்கியது தொடர்பாக மீளாய்வாண்டிற்காக பெறவேண்டிய வாடகை வருமானம் ரூபா 1,035,657 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) தேயிலை வர்ணங்களைத் தரப்படுத்தும் இயந்திரத்தை உற்பத்தி செய்யும் ஆய்வு செயற்திட்டத்திற்காக 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 4,209,066 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 1,102,586 தொகை ஆய்வுச் செலவுகள் என கணக்கீடு செய்வதற்கு பதிலாக நடைபெறு வேலை என நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ஆய்வு செயற்திட்டங்கள் தொடர்பாக செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவது தொடர்பாக நேரிட்டுள்ள செலவுகள் ரூபா 9,234,889 தொகை நிதி செயலாற்றுகை கூற்றில் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி செலவுகள் என மற்றும் மூலதன மானியத்தைப் பயன்படுத்துவதை வருமானம் எனக்

காட்டுவதற்கு பதிலாக, அப் பணத்தின் உரிமைகள் மாற்றக் கூற்றில் மூலதன மானியங்களில் இருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

2.3 பெற வேண்டிய பற்று செலுத்த வேண்டிய மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டங்கள் மற்றும் பாடநெறிகள் நடாத்துதல் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 8,986,777 இற்கான மீதியில் ரூபா 4,178,088 தொகை, 2017 நவம்பர் மாதம் வரை அறவீடு செய்திருக்காததுடன் அவற்றில் 02 வருடங்களை விட மிகையான மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,586,990 தொகை ஆக இருந்தது.

(ஆ) 3 நபர்களிடமிருந்து மற்றும் 4 வெளிநிறுவனங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய 3 வருடங்களை மிகைத்திருந்த ரூபா 222,270 இற்கான மீதிகளை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) வெளிதரப்பினருக்கு செலுத்த வேண்டியிருந்த 3 வருடங்களை விட மிகையான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,877,338 தொகையாக காணப்பட்டதுடன் இந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது வழங்கியிருந்த ரூபா 195,150 தொகை பெறுமதியான 4 முற்பணங்களை மீளாய்வாண்டு இறுதிவரை தீர்த்திருக்கவில்லை.

2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை	
i. VII ஆம் அத்தியாயம் 10 ஆம் பிரிவு மற்றும் 2013 அக்டோபர் 07 ஆம் திகதிய 21/2013 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 2 (அ) மற்றும் (ஆ)	அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் இன்றி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரினால் விடுமுறை நாட்களில் கடமையாற்றியதற்காக மீளாய்வண்டின் போது 22 விடுமுறை நாட்களுக்காக விடுமுறை நாள் சம்பளம் என ரூபா 81,620 தொகை பெற்றிருந்தார்.
ii. VII ஆம் அத்தியாயத்தின் 12.5.4 ஆம் பிரிவு	பதில் கடமையாற்றும் பதவி ஒன்றிற்கான கொடுப்பனவு செய்யும் போது பதில் கடமையாற்றும் பதவியின் ஆரம்ப சம்பளத்தில் 25 சதவீதம் மாத்திரம் செலுத்தப்பட வேண்டும் எனினும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் பதவியில் பதில் கடமையாற்றியதற்கான படி செலுத்துவற்கு பதிலாக 2015 மே முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை போக்குவரத்து மற்றும் எரிபொருள் படியாக ரூபா 2,778,116 தொகை செலுத்தியிருந்தமையால் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு பதில் கடமைக்காக உரித்தான படியை விட ரூபா 2,214,602 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.
(ஆ) 2000 ஜனவரி 19 திகதிய 380 ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கை	சுற்றறிக்கையின் மூலம் அணவல் செய்யப்படாத பற்றறி பரிசோதனை, RCCB பரிசோதனை ஆகிய செயற்திட்டங்கள்

ஊடாக கிடைக்கும் வருமானத்தின் மிகையினை அதனோடு தொடர்புடைய நேர் மற்றும் மறை பதவியணியினருக்கு பங்கீடு செய்யப்படலாகாது எனினும் மீளாய்வாண்டின் போது அவ் வருமானத்தில் ரூபா 831,897 தொகை பதவியணியினருக்கு பங்கீடு செய்யப்பட்டிருநதது.

3 நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறவனத்தின் நிதி விளைவுகள் ரூபா 15,287,030 இற்கான பற்றாக்குறையொன்றினை காட்டியதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 9,511,887 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 24,798,917 இற்கான வீழ்ச்சியொன்று காணக்கூடியதாக இருந்தது. மீளாய்வாண்டின் போது மீண்டுவரும் மானியங்கள் பெறுவனவு ரூபா 18,622,000 இனால் குறைவடைதல் மற்றும் செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 5,830,487 இனால் அதிகரித்தல் மேற்கூறிய நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு முக்கியமாக தாக்கியிருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிவிளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆண்டின் போது ரூபா 18,679,669 இற்கான மிகை 2015 ஆம் ஆண்டளவில் ரூபா 9,511,887 தொகை வரை குறைவடைந்ததுடன் 2016 ஆண்டின் போது ரூபா 15,287,030 இற்கான பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த போது 2012 ஆண்டின் போது ரூபா 77,249,669 தொகைக்கான நிறுவனத்தின் பங்களிப்பு 2016 வருட இறுதி அளவில் ரூபா 90,296,226 தொகை வரை வளர்ச்சியடைந்திருந்த போதிலும், 2015 ஆண்டிற்கு நேரொப்ப 10 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

4 செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தை முன்னேற்றும் சட்டத்தின் 22 ஆம் பந்தியின் பிரகாரம், நிறுவனத்தின் பங்களிப்பானது நவீன தொழில்நுடட்பத்தை அறிமுகப்படுத்துவதை விரைவாக்குவதற்காக நவீன தொழில்நுட்பங்களை பிரயோகப்படுத்துவதற்காக ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி விடயங்களை ஆரம்பித்தல் மற்றும் பேணல், அரச மற்றும் தனியார் துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் விடயங்களில் நவீன தொழில்நுட்பம் தொடர்பாக ஆட்களை பயிற்றுவித்தல் மற்றும் எதிர்கால ஆய்வு விடயங்களை மேம்படுத்துதல் ஆக இருந்த போதிலும் நிறுவனத்தின் செயலாற்றுகை தொடர்பாக பரிசோதனை மேற்கொண்ட போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) தேயிலையின் வர்ணத்தை தரப்படுத்தும் இயந்திரத்தை உற்பத்தி செய்யும் செயற்திட்டம்

(i) தேயிலை வர்ணத்தை தரப்படுத்துவதற்கான குறைந்த கிரயத்தில் இயந்திரம் ஒன்றினை உற்பத்தி செய்யும் ஆய்வு செயற்திட்டம் ஒன்று 2012 ஆண்டின் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அச் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டிய காலம் ஒவ்வொரு வருடத்திலும் செயற்பட வேண்டிய பங்களிப்பு என்பன தொடர்பான திட்டமொன்று தயாரித்திருக்காததுடன் 2016 ஆண்டு இறுதி வரையும் இயந்திரத்தை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த கிரயம் ரூபா 4,209,066 தொகை ஆக இருந்தது.

(ii) இந்த ஆய்வு செயற்திட்டத்தின் மூலம் உள்ளூர் தேயிலைக் கைத்தொழிலுக்கு நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் முறை, தற்போது சந்தையில் காணப்படும் இயந்திரங்களை விட இதன் மூலம் எதிர்பார்க்கும் விஷேட பண்புகள், எதிர்ப்பார்க்கும் சந்தை, எதிர்பார்க்கும் கிரயம் மற்றும் தேயிலை கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக பங்களிப்பு செய்யும் முறை எவ்வாறு என்பவற்றை காட்டக்கூடிய விதமாக முன்சாத்திக்கூறு

அறிக்கை ஒன்று செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் தயாரித்திருக்கவில்லை.

(iii) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை முன்னேற்றும் சட்டத்தின் பிரகாரம் நவீன தொழிநுட்பம் என்பதில் இலத்திரனியலும் அடங்குகின்றன எனினும் நிறுவனத்தில் இலத்திரனியல் பிரிவு ஒன்றும் நிறுவப்பட்டிருந்தது. எனினும், இலத்திரனியலை முன்னேற்றுவதற்காக தேவையான விஷேடத்துவ அறிவு நிறுவனத்தில் காணப்படவில்லை என குறிப்பிட்டு மேற்கூறிய செயற்திட்டத்தை தொடர்ந்து நடாத்துவதற்காக 2016 மார்ச் மாதத்தின் போது தனியார் நிறுவனமொன்றுடன் ரூபா 8,000,000 இற்கான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஆகஸ்ட் அளவில் அதாவது IV ஆவது கட்ட வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனினும், 1 கட்ட வேலை மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததென பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) தொல்பொருள் தேடுதல்களுக்காக மற்றும் அகழ்தலுக்காக நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்

தொல்பொருளியல் திணைக்களத்திற்காக தொல்பொருள் தேடுதல்கள் மற்றும் அகழ்தல் விடயங்களுக்காக நிழற்பிரதிகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் ரூபா 10,564,677 தொகை பெறுமதியில் ஓட்டுநர் இன்றிய விமானம் ஒன்று 2016 ஆகஸ்ட் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. விமானத்தை கொள்வனவு செய்வதற்கு முன்னர் அதை செயற்படுத்துவது தொடர்பாக ரூபா 110,322 இற்கான செலவு ஒன்று செலவிடப்பட்டு இரண்டு உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு பயிற்சி ஒன்றும் வழங்கியிருந்த போதிலும் நவம்பர் 30 முதலாவதாக விமானத்தை வானில் பறக்கவிடப்பட்ட போது விமானம் சேதமடைந்திருந்தது. உற்பத்தி செய்யப்பட்ட நாட்டிற்கு அனுப்பி விமானத்தை அதனைப் பழுதுபார்த்திருந்த போதிலும் 2017 அக்டோபர் 30 திகதி வரையும் செயற்படுத்தக் கூடிய நிலையில் காணப்படவில்லை என பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) நிறுவனத்திற்குச் சொந்தமான தொலைதொடர்பு கோபுரம், இலங்கை தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு வாடகைக்கு கொடுப்பது தொடர்பாக நிறுவனத்தினால் இலங்கை தொலைதொடர்பு ஒழுங்குபடுதல் ஆணைக்குழுவுடன் 2013 ஆண்டின் போது மேற்கொண்டிருந்த உடன்படிக்கை 2015 ஜனவரி 31 திகதி முடிவடைந்திருந்தது. எனினும் குறிப்பிட்ட வாடகை உடன்படிக்கையினை காலநீடிப்பு செய்யாமல் 2015 பெப்ரவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை பயன்படுத்தியிருந்ததுடன் அது தொடர்பாக நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 638,134 வாடகை ஒன்று அறவிடப்படவேண்டியிருந்தது.

மேலும் 2015 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் 2017 ஜூலை 31 திகதியில் முடிவடைந்த 02 வருட காலப்பகுதிக்காக உடன்படிக்கை கையொப்பமிட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட காலப்பகுதிக்காக கிடைக்க வேண்டிய வாடகை ரூபா 2,079,768 தொகையினை 2017 நவம்பர் 30 திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) புவி அவதானிப்பு தரவுகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் விநியோகித்தல் தொடர்பாக தேசிய மத்திய நிலையம்

நாட்டின் அபிவிருத்திக்காக விண்வெளித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக சீன அரசாங்கத்தின் பங்களிப்புடன் செயற்கைக் கோள் மத்திய நிலையமொன்று நிறுவும் செயற்திட்டமொன்று முன் சாத்தியக்கூறு ஆய்வு ஒன்று இன்றி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. சீன முகவர் நிலையத்துடனான புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் மத்திய நிலையமொன்று நிறுவுவதற்கு பொருத்தமான காணியொன்று தெரிவு செய்யும் போது இரு சாராரும் பங்குபற்ற வேண்டுமெனினும் சீன முகவர் நிலையத்தின் பங்கு பற்றல் இன்றி நிறுவனத்தின் தற்றுணியின் பிரகாரம் காணியொன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது. எனினும், சீன முகவர் நிலையத்தினால் பின்னர் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்பு சுற்றுலாக்களின் போது அக்காணி செயற்திட்டத்திற்கு பொருத்தமற்ற காரணத்தினால் செயற்திட்டத்திற்காக வேறு காணியொன்று தேடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், நிறுவனத்தினால் அந்த காணியை சுற்றி வேலி ஒன்று நிர்மாணிப்பதற்காக 2016 திசெம்பர் 16 ஆம் திகதி ரூபா 3,545,744 இற்கான தொகையொன்று நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2017 நவம்பர் மாதம் அளவில் குறிப்பிட்ட வேலி

நிர்மாணிக்கப்பட்டிருக்காமையால் அப்பணத்தை திருப்பி பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2012 ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்ட ரூபா 4,091,099 தொகை கிரயத்தையுடைய இருப்புகளில் பயன்படுத்த முடியாத இருப்பு மற்றும் மெதுவாக அசையும் சொத்துக்களை இனங்கண்டு அகற்றுவதற்காக அல்லது நிதிக்கூற்றுகளில் ஒதுக்கங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது இடம்பெற்றிருந்த வாகன விபத்து ஒன்றின் மூலம் ஏற்பட்டிருந்த ரூபா 50,063 இற்கான நட்டத்தை சாரதியிடம் அறவிடப்பட வேண்டும் என ஆரம்ப விசாரணையின் போது விதைந்துரைந்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2017 ஆகஸ்ட் வரை அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4.3 பதவியணியினர் நிருவாகம்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியின் 177 ஆக இருந்த போதிலும், உள்ளவாறான பதவியணி 91 ஆக காணப்பட்டமையால் 86 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளபடுகின்றன

(அ) மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு 29 பதவிகளில் காணப்பட்ட 96 வெற்றிடங்களில் 9 இற்கான பதவி வெற்றிடங்களை நிறப்புவதற்கு மாத்திரம் பத்திரிகை விளம்பரம் வெளியிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் 02 பதவிகளில் 8 வெற்றிடங்களுக்காக மாத்திரம் ஆள் சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி விவகாரங்களை நிறைவேற்றும் குறிக்கோளுடன் செயற்படும் இந்த நிறுவனம் நுண் இலத்திரனியல், தொலைதொடர்பு, தகவல் தொழிநுட்பம், விண்வெளி தொழிநுட்பம், ரோபோ விஞ்ஞானம் பற்றிய மற்றும் நவீன தொழில்நுட்ப விடயம் மீதான மற்றும் ஏனைய தொடர்புடைய பரப்புகளில் விஷேடத்துவமுடைய முன்னடைவுள்ள நிறுவனமுமாகும். அந்த பரப்புக்களுக்கு நேரடியாக தொடர்புடைய உத்தியோகத்தர்களின் அடங்கிய 34 பதவிகளில் 70 வெற்றிடங்கள் காணப்படல் நிறுவனத்தினால் எதிர்பார்த்த குறிக்கோளை நோக்கி நெருங்குவதற்கு பாதிக்கக் கூடியதாக இருப்பதனால் வெற்றிடங்களை நிரப்புவது

தொடர்பாக காணப்படும் சிக்கல்களை மீளாய்வு செய்து அச்சிக்கல்களை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக்கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 13.3 பிரிவின் பிரகாரம் பதில் கடமை நியமனம் ஒன்று செய்யப்பட வேண்டியது நிரந்தர நியமனம் ஒன்று செய்யும் வரை தற்காலிக பரிகாரம் ஒன்றாக மாத்திரம் ஆக இருந்ததுடன், பதவிக்கு முழு நேர அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவரின் சேவை தேவையெனின் நிரந்தர நியமனம் ஒன்று தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும் 2013 மற்றும் 2015 ஆண்டுகள் முதல் பதில் கடமை நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த 4 சிரேஷ்ட பிரதி பணிப்பாளர் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2017 மே 30 திகதி வரையும் நடவடிக்கை எடுத்தருக்கவில்லை.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 செயல் நடவடிக்கை திட்டம்

(அ) 2016 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருந்த 77 செயற்பாடுகளில் 25 தவிர ஏனைய ஒவ்வொரு செயற்பாடுகளுக்காக மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என காட்டப்பட்டிருக்காததுடன் வருட இறுதி செயலாற்றுகையை மதிப்பாய்வு செய்த போது உண்மையாக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என செயற்திட்டங்கள் எதிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒவ்வொரு செயற்திட்டத்தின் மூலமும் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த தொகை மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்த போது பௌதீக முன்னேற்றத்தை சதவீதப்படி மதிப்பாய்வு மேற்கொள்வதன் மூலம் நடைபெறு ஆண்டின் போது நிறுவனத்தின் நிதி கிரயத்திற்கு நேரொப்ப முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்கும் தொடர்ந்து வரும் ஆண்டின் செயற்பாடுகளை சிறந்த முறையில் திட்டமிடுவதற்கும் வசதியாக இருந்த போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளில் அவ்வாறு காட்டப்பட்டிருக்கவில்லை.

5.2 பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெறுகைகள் திட்டத்தில் உள்ளடங்கியிருந்த மதிப்பீட்டு பெறுமதி ரூபா 24,064,881 தொகைக்கான பண்டங்கள் மற்றும் சேவைகளுக்காக 60 பெறுகைகள் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், 2015 ஆண்டின் போது கொள்வனவு செய்வதற்கு முடியாதிருந்த காரணத்தினால் 2016 ஆண்டின் போது பெறுகைகள் திட்டத்தில் உள்ளடங்கியிருந்த ரூபா 20,910,419 தொகைக்கான மதிப்பீட்டுப் பெறுமதியையுடைய 14 பெறுகைகள் 2016 ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் பெறுகைகள் செயற்பாடுகள் வினைதிறனுடன் திட்டமிடப்பட்டிருந்தனவா என கணக்காய்வில் சிக்கல் தன்மை காணப்பட்டது.

6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

	முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள்		அவதானிப்புக்கள்
(அ)	மனிதவள முகாமைத்துவம்	(i)	விடுமுறை நாட்களில் கடமையாற்றுவதற்கு முன்னர் அதற்கான அங்கீகாரம் பெற வேண்டும் எனினும் கடமையாற்றிய நாளைக்கு பின்னர் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தல்
		(ii)	உள்வருதல் வெளிச் செல்லல் பதிவேட்டின் பிரகாரம் குறிப்பிட்ட தினத்தில் உள்வருதல் மற்றும்

வெளிச்செல்லல் சரியானவை என அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுபடுத்தப்படாமை.

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(i) விடுமுறை நாட்களில் வேலை செய்வதற்காக படிகள் செலுத்தும் போது "செலுத்தப்பட்டது" என குறிப்பிடப்பட்டு மீண்டும் அக் கொள்வனவு செய்யப்படமாட்டாது என உறுதிப்படுத்தியிருக்காமை.

(ii) விடுமுறை நாட்களில் வேலை செய்வதற்கான படிகளுக்காக விண்ணப்பிக்கும் போது உரிய படிவங்களைப் பயன்படுத்தாமை.

(இ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு

(i) வெளிநாட்டு பிரயாணம் தொடர்பாக அழைப்பிதழ், விண்ணப்பங்கள், அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த கடிதங்கள் ஆகியவற்றுடன் பூர்த்தி செய்யப்பட்ட கோவைகள் பேணப்பட்டிருக்காமை.

(ii) மீண்டும் சேவைக்கு வந்தமையை அறிவிக்கும் கடிதம் ஒன்று வெளிநாட்டு பிரயாணக் கோவையில் அல்லது ஆளுக்குரிய கோவையில் காணப்படாமை.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச். எம். காமினி விஜேசிங்க

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

13.0 கணக்காய்வாளர் நாயகத்தின் எண்டெமண்ட்டிற்கு உதவுகிறது

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(இ) பிரிவின் நிபந்தனைகளுக்கு அமைவுற நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர். சி. கிளார்க்கின் 2016 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்குரிய நிதிக் கூற்றுக்களின் மீது கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில்கள்

2.2 நிதியியல் கூற்றுக்கள் பற்றிய கருத்துரைகள்

2.2.1 இலங்கை அரச துறை கணக்கியற் கட்டளைச் சட்டங்கள்

(i) கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டதைப் போன்று, மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதிக்குரிய காசோட்டற்கூற்றின் பணிக்கொடை கொடுப்பனவுடன் தொடர்புற்ற வகையில் காட்டப்பட்ட வேறுபாடான ரூபாய் 30,000/- தொகையானது, சம்பந்தப்பட்ட கணக்கினை சீராக்கம் செய்யப்பட்டதனால் ஏற்பட்டதாகும் என அவதானிக்கப்பட்டது.

(ii) கணக்காய்வு அறிக்கையில் அவதானிக்கப்பட்டதைப் போன்று, ரூபாய் 79,043,000/- பெறுமதியான மூலதன மானியமானது மீளாய்வுக்குட்பட்ட வருடகாலப் பகுதியில் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ரூபாய் 6,390,000/- எனப்படும் தொகையானது நடப்பல்லா மானியத்தின் கீழ் பெறப்பட்டிருந்தது. மானியம் என்ற அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகையானது ரூபாய் 85,433,000/- ஆகும்.

2.2.2 கணக்கியல் குறைபாடுகள்

அவதானிப்பில் குறிப்பிடப்பட்டதைப் போன்று மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில், வருமானமானது பிற்போடப்பட்ட கணக்கில் பதியப்பட்டிருந்தபோதிலும் நிலுவை அடிப்படையிலான கணக்கீடு 2017 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்டது.

2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ரூபாய் 91,637/- எனும் பெறுமானத்தையுடைய நிலுவை பெறுமானத் தேய்வானது தவறுதலாக கூட்டிக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் இதனைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டதைப் போன்று, தொலைதொடர்பாடல் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவிற்கும் (TRC) மற்றும் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர். சி. கிளார்க் நிறுவகத்திற்கும் (ACCIMT) இடையிலான ஒரு உடன்படிக்கையினை கைச்சாத்திடுவதற்கு, தொலைதொடர்பாடல் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவின் தரப்பில் ஏற்பட்ட தாமதத்தினால் சம்பந்தப்பட்ட வாடகை வருமானமான ரூபாய் 1,035,657/- ஆனது அவதானிப்பில் குறிப்பீடு

செய்யப்பட்டதைப் போன்று கணக்கீடு செய்யப்படவில்லை. சம்பந்தப்பட்ட உடன்படிக்கையானது தற்போது கைச்சாத்திடப்பட்டுள்ளமையினால் இந்த வாடகை வருமானமானது 2017 நிதியாண்டில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதைப் போன்று சம்பந்தப்பட்ட சீராக்கற் குறிப்புக்களை 2017 ஆம் ஆண்டிற்குரிய கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) 2017 ஆம் ஆண்டிலிருந்து, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினமானது நிதியியல் செயலாற்றுகை கூற்றில் ஒரு செலவினமாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த செலவினத்திற்குரிய சம்பந்தப்பட்ட பெறுமானமானது நிதிச் செயலாற்றுகை கூற்றில் மூலதன மானிய கணக்குகளில் வருமானமாக காட்டப்படும்.

2.3 கொடுக்கப்படவேண்டிய, பெறவேண்டிய மிகுதிகள்

(அ) கணக்காய்வில் குறிப்பீடு செய்யப்பட்டதைப் போன்று மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் டிசம்பர் 31 இல் உள்ளவாறாக நோக்கின், கருத்திட்டங்கள் மற்றும் கற்கை நெறிகள் தொடர்பில் பெறப்படவேண்டிய தொகையானது ரூபாய் 8,986,777/- ஆகும். ரூபாய் 4,186,528/- ஆனது 2017/12/31 ஆம் திகதிக்கு முன்பதாக வசூலிக்கப்பட்டுவிட்டது. ரூபாய் 622,160/- பெறுமதியான விலைப்பட்டியல்கள் இரத்து செய்யப்பட்டுவிட்டன. ஆதலினால் வசூலிக்கப்படவேண்டிய உண்மையான தொகை ரூபாய் 4,178, 088/- ஆகும்.

மூன்று வருடங்களுக்கும் அதிகமான காலப்பகுதியிலிருந்து எஞ்சியுள்ள ரூபாய் 1,655,681/- பெறுமானமுடைய மிகுதிகளும் மற்றும் ரூபாய் 25,132/- மிகுதியும் 2017/10/31 இற்கு முன்னர் வசூலிக்கப்பட்டுவிட்டது. தற்போது வசூலிக்கப்பட வேண்டிய உண்மையான தொகை ரூபாய் 1,505,444/- ஆகும் என்பதுடன் இதனை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) கணக்காய்வில் குறிப்பீடு செய்யப்பட்ட பெறுமானமானது கீழ்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

நபர்கள்	ரூபாய்	
கடன்பட்டோர் – திரு. பீ.டி. பர்னாந்து	4,000.00	
கடன்பட்டோர் – திரு.ஜயது பர்னாந்து	106,894.72	
கடன்பட்டோர் – திரு. பீ.பி.ஆர். பெரேரா	45,699.66	156,594.38
நிறுவகங்கள்		
காப்புறுதி கூட்டுத்தாபன கடன்பட்டோர்	9,700.00	

R.S. கடன்பட்டோர்	14,434.91	
தேர்தல் திணைக்களம்	8,159.60	
அமைச்சு கடன்பட்டோர் – டிஷ் தொலைக்காட்சி	33,381.50	65,676.01
		222,270.39

மேற்கூறப்பட்ட தொகைகளை வசூலிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(இ) சேவைகள் வழங்குகை மற்றும் ஏனைய மீளளிக்கத்தக்க வைப்புகள் நிமித்தம் மேற்கூறப்பட்ட பெறுமானங்களாவன, மறித்து வைத்தல் பணத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

(ஈ) 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்ட ரூபாய் 195,150/- பெறுமானமுடைய 4 முற்பணங்களை அறுதியீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2.4 சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை

(i) தாபனக்கோவை மற்றும் தாபன விதிக்கோவையினை திருத்தமைவு செய்தல் தொடர்பில் விநியோகிக்கப்பட்டதும் 2013 ஒக்டோபர் 07 ஆம் திகதியிடப்பட்டதுமான பொது நிர்வாக சுற்றறிக்கை பந்தி 2 (அ) வில் தரப்பட்டுள்ள விடயங்கள் ஆகியனவையே இந்தக் கணக்காய்வு விசாரணைக்கு அடிப்படையாக அமைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்த நிறுவகம் ஒரு நியதிச் சட்டசபையாகும் என்பதுடன் இது பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இன்னுமொரு சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது. (1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான தொழில்நுட்ப (திருத்தமைவு) சட்டம்). மற்றும் அந்த நிறுவகங்களினை பொறுத்தவரையில் தாபன விதிக்கோவையிலுள்ள ஏற்பாடுகளாவன, நேரடியாக பிரயோகிக்கப்படவில்லை. இதுவும் தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தாபன விதிக்கோவையிலுள்ள சில ஏற்பாடுகளாவன நிறுவகத்தின் செயற்பாடுகளுக்கு பொருத்தமானவகையில் சீராக்கிய பின்னர் நிறுவகத்தினால் பணிப்பாளர் சபையின் அனுமதிக்கு அமைவுற பின்பற்றப்பட்டுள்ளன. (உதாரணம் சபை ஆளுனர்களின் அனுமதிக்கு அமைவுற, தாபன விதிக்கோவையிலுள்ள ஏற்பாடுகளாவன, ஏற்றவாறு சீராக்கம் செய்யப்பட்டு, நிறுவகத்தின் ஒழுக்க நெறி செயன்முறையாக பயன்படுத்தப்படல்).

நிறுவகத்தின் நியதிச் சட்ட செயற்பாடுகளின் பகிர்வு தொடர்பில் நிறுவகத்தின் அக நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயங்களில் ஏற்புடைய தீர்மானங்களை எடுப்பதற்கான

அதிகாரத்தை ஆளுநர் சபை கொண்டுள்ளது. இந்த தீர்மானங்களாவன, ஒரு சுற்றறிக்கையிலுள்ள ஏதேனும் ஏற்பாடுகளுக்கு, அல்லது அமைச்சரவை அமைச்சர்களின் தீர்மானங்களுக்கு அல்லது அரசியலமைப்பினால் அனுமதிக்கப்பட்ட ஒரு சட்டத்தை அடிப்படையாகக்கொண்டு வெளியிடப்பட்ட நீதிமன்ற தீர்மானத்திற்கு அல்லது அத்தகைய சட்டத்துடன் இணங்கும் வகையில் வெளியிடப்பட்ட ஒரு ஒழுங்கு விதிக்கு அல்லது அத்தகைய சட்டத்தில்/ஒழுங்குவிதிகளில் விதித்துரைக்கப்பட்டுள்ள சிற்சில ஏற்பாடுகளுக்கு ஒருங்கிணைந்ததாக இருந்தால் இந்த தீர்மானங்களாவன சட்டரீதியான தீர்மானங்களாக கருதப்படும்.

கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று, பதவிநிலை உத்தியோகத்தர்கள் வார இறுதி நாட்களில் அல்லது விடுமுறை தினங்களில் ஆகக்கூடியது இரண்டு நாட்களுக்கு மட்டுமே கடமைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், சில சந்தர்ப்பங்களில் நிறுவகத்தின் பணியின் அவசர நிலையைப் பொறுத்து அவர்கள் இரு நாட்களுக்கும் அதிகமான நாட்களில் பணி செய்ய நேரிடுவதுண்டு. தற்போதுள்ள பதவியணியினருக்கு ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் செய்யப்படுவதற்கு குறிப்பிட்ட கடமைகள் ஒதுக்கீடு செய்யப்படுவதினால், எஞ்சியுள்ள பணிகளை பூரணப்படுத்துவதற்கு அவர்களிடமிருந்து மேலதிகமாக சேவையை பெற்றுக்கொள்ளவேண்டியுள்ளது. இத்தகைய மேலதிகமான வேலைகள் தொடர்பில், அதிகபட்சமாக 05 நாட்கள் பணியாற்றுவதற்கு கோரி ஆளுனர் சபைக்கு 2013.09.09 அன்று ஒரு கோரிக்கையானது ஆளுனர் சபைக்கு முன்வைக்கப்பட்டு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் அக்கோரிக்கையுடன் செய்யப்படவுள்ள பணிகளின் விவரணமும் எழுத்து மூலம் முன்வைக்கப்பட்டது.

வார இறுதி நாட்களில் கடமையாற்றுவதற்குரிய அனுமதியானது, ஆளுனர் சபையினால் அவர்களின் அதிகாரத்திற்குட்பட்ட வகையில் ஒரு சட்ட ரீதியிலான தீர்மானமாக வழங்கப்பட்டதினால், வார இறுதி நாட்களில் பணியில் ஈடுபடலானது சபை ஆளுனர்களின் அனுமதிக்கு அமைவுற முன்னெடுக்கப்பட்டது. நிறுவக ரீதியிலான விடயங்கள் தொடர்பிலுள்ள எதுவித சுற்றறிக்கைகளும் தகர்க்கப்படவில்லை என்பது தொடர்பில் தயவுகூர்ந்து உங்கள் அவதானத்தை செலுத்தும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இந்த விடயம் தொடர்பில் முறையாக அனுமதியானது சபை ஆளுனர்களினால் வழங்கப்பட்டமையினால் கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டதைப் போன்று, இது தொடர்பில் அமைச்சின் செயலாளரின் முன் அனுமதியானது பெறப்படத்தேவையில்லை.

(ii) சிரேட்ட மட்ட நிலைகளில் நிலவும் இந்த பதவிநிலை வெற்றிடங்களுக்கு வெளிவாரி விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காததால், நிறுவகத்திற்குள் பணியாற்றும் தகைமையுடைய அலுவலர்களை வெற்றிடமாகவிருக்கும் இந்த பணி நிமித்தம் நியமனம்

செய்யப்பட்டதுடன் இது அவர்களின் நிரந்தர பதவிக்குரிய வழமையான பணியினை முன்னெடுக்கப்படவேண்டிய மேலதிகமான பணி என்பதுடன் இது நிறுவகத்தின் நிர்வாக மற்றும் ஏனைய பணிகளினை தங்குதடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்கு சபை ஆளுனர்களின் அனுமதியுடன் முன்னெடுக்கப்பட்டதொன்றாகும். சகல அலுவலக பணி நிமித்தத்திற்குரிய போக்குவரத்து படி மற்றும் எரிபொருள் படியானது ஆளுனர் சபையின் தீர்மானத்திற்கு அமைவுற வழங்கப்பட்டதுடன் இதில் அலுவலர்கள் அலுவலக பணி நிமித்தம் தாமாகவே பயணம் செய்யும் செலவும் உள்ளடங்கும். தாபன விதிக்கோவையின்படி பதில் கடைமையாற்றல் பதவிக்குரிய சம்பளத்தில் 12% இனை நிறுவகம் இந்த அலுவலர்களுக்கு கொடுப்பனவு செய்யாது என்பதை அறியத்தருகிறேன்.

(ஆ) பொது நிதிச் சுற்றறிக்கை இல. 380 இன் ஏற்பாடுகளுக்கு அமைவுற ஆராய்ச்சியாளர்கள், உசாவுத்துணை சேவைகள் மற்றும் பரிசீலனைகள் மற்றும் அளவீட்டு சேவைகள் அத்துடன் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் உழைக்கப்படும் மிகை வருமானமானது பதவியணி உறுப்பினர்களிடையே பகிரப்படுகிறது. இவ்வாறு பதவியணி உறுப்பினர்களிடையே பகிர்வதற்கு தற்போது பயன்படுத்தப்படும் முறையானது மீளாய்வு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதற்கமைவுற இந்த முறை கணக்காய்வு அவதானிப்பில் அவதானிக்கப்பட்டதற்கு அமைவுற பொருத்தமான முறையில் மாற்றப்பட்டு அறிமுகப்படுத்தப்படும்.

3. நிதியியல் மீளாய்வு

3.1 நிதியியல் பெறுபேறு

கணக்காய்வு அறிக்கையில் அவதானிக்கப்பட்டதைப் போன்று, திறைசேரியிடமிருந்து நடப்பு மானியங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற குறைவான தொகையானது, பற்றாக்குறை தொகையான ரூபாய் 15,287,030/- இல் பிரதானமாக தாக்கத்தை ஏற்படுத்தியது. 2015 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நடப்பு மானியங்களின் மிச்சத்தொகையானது, 2016 ஆம் ஆண்டில் பாவிக்கப்பட்டமையினால் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டிற்குரியதாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நடப்பு மானியங்களின் அளவானது குறைக்கப்பட்டது. அரசின் கொள்கை தீர்மானமொன்றின் காரணமாக, சிரேட்ட மட்ட அலுவலர்களின் எரிபொருள் படி, போக்குவரத்து படி மற்றும் தொடர்பாடல் படி என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பானது, கணக்காய்வு அறிக்கையில் அவதானிக்கப்பட்டதைப் போன்று தொழிற்பாட்டு செலவினத்தில் ரூபாய் 5,830,487.00 இனால் அதிகரித்தது. இதற்கமைவுற, எமது நோக்கானது, நிதியியல் பெறுபேறுகளில் பெறுமானத்தேய்வினைப் போன்று இதனை வரையறை செய்வது செம்மையானது அல்ல ஆகும்.

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தினதும் அது போன்று அதற்கு முந்திய 4 வருடங்களினதும் கூட்டப்பட்ட பெறுமானத்தை பகுப்பாய்வு செய்து ஒப்பிட்டு நோக்குமிடத்து 2016 ஆம் ஆண்டினை விட 10% அவை குறைந்திருப்பதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. 2016 ஆம் ஆண்டின் பற்றாக்குறையானது இந்த 10% குறைவினை பிரதானமாக தாக்குவதுடன், மொத்த கூட்டப்பட்ட பெறுமானத்தில் படிப்படியான வளர்ச்சி காட்டப்பட்டுள்ளது.

4. தொழிற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

(அ) <u>உற்பத்தி செய்யப்படும் தேயிலையின் நிறத்திற்கு அமைவுற வகுப்புப்படுத்தும் முறைமை பற்றிய கருத்திட்டம்</u>

(i)/(ii) அத்தகைய தொழில்நுட்பவியல் ரீதியாக சிக்கலான கருத்திட்டங்கள் தொடர்பிலுள்ள இலகு ஆய்வு அறிக்கையானது இரு ஆக்கக்கூறுகளைக் கொண்டிருக்கும். அவையாவன, பொது சாத்தியத்தன்மை மற்றும் தொழில்நுட்பவியல் சாத்தியத்தன்மை என்பனவாகும். தேயிலை ஆலையொன்றிற்கு முன்மொழியப்பட்ட முறைமைக்குள்ள கேள்வி, ஒரு தேயிலை ஆலையில் அந்த முறைமையின் பிரதான செயற்பாடு, தற்போது கிடைக்கப்பெறக்கூடியதாக உள்ள மாதிரிகள், உற்பத்தி செய்யப்பட்ட நாடும் அண்ணளவான விலையும், இறக்குமதியினை நிறுத்துவதால் நாட்டிற்கு கிடைக்கும் சேமிப்பின் அளவு, தற்போதுள்ள இயந்திரத்தின் குறைபாடுகள் மற்றும் அவற்றினை மேலும் முன்னேற்றுவதற்குரிய தொழில்நுட்பவியல் யுக்திகள், நாட்டில் தற்போது பயன்படுத்தப்படும் அதே மாதிரியான இயந்திரங்களின் எண்ணிக்கை, செயற்றிறன் வாழ்காலம், மற்றும் பொது சாத்தியத்தன்மையில் உள்ளடக்கப்படவேண்டிய தேயிலை ஆலைகளில் இந்த இயந்திரங்களுக்கான கேள்வி போன்ற விடயங்கள் உள்ளடங்கலாக கருத்திட்டத்தின் முக்கிய விடயங்கள் பல செய்கைமுறை சார் விளக்கமளிப்புக்களாவன ஆளுனர் சபைக்கு செய்து காட்டப்பட்டது. பொது சாத்தியத்தன்மைக்குரிய அறிக்கையானது 2011 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு பிற்பாடு தொடங்கப்பட்டு கருத்திட்ட பிரேரணையானது சபை ஆளுனர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. பொது ஆய்வு பூரணமடைந்த பின்னர் 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் செய்கைமுறை விளக்கமளிப்புகள் முன்னெடுக்கப்பட்டதுடன் பல ஆக்கக்கூறுகள் தொடர்பிலான விளக்கமளிப்புகளும் அதில் உள்ளடக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டில் சபை ஆளுனர்களின் அனுமதி பெற்றுக்கொண்ட பின்னர் கருத்திட்டத்தின் முதல் கட்டத்துடன் தொடர்புடைய தொழில்நுட்பவியல் செயன்முறைகள் தொடங்கப்பட்டன. கருத்திட்ட பிரேரணைக்கு அமைவுற முதல் கட்டம் தொடர்பில் ஒரு வருட காலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. முதல் கட்டத்தின் பிரதான நோக்கானது, தொழில்நுட்பவியல் கட்டுருவாக்கத்திற்கான முன்

ஆயத்தப்படுத்துகையாகும். சாத்தியப்படல் ஆய்வானது, இதற்கமைவுற முன்னெடுக்கப்படுகிறது.

அதேநேரத்தில் கருத்திட்டத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய மின்னணுவியல் எந்திரியும் மற்றும் இருந்த ஒரேயொரு எந்திரவியல் எந்திரியும் தமது பதவியினை இராஜினாமா செய்தனர். அதன் பின்பு கருத்திட்ட பணி தொடர்பில் பணியாற்றுவதற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இரு எந்திரிகள் கருத்திட்ட பணிகளை தொடங்கியதுடன் இவர்கள் தொழில்நுட்பவியல் ரீதியாக அனுபவசார் அறிவினை கொண்டவர்களாக இருந்தபோதிலும் இவர்கள் கருத்திட்டத்தில் 06 மாத காலம் பணியாற்றிய பின்னர், வெளிநாட்டில் வேலை வாய்ப்பினை பெற்றுக்கொண்ட காரணத்தினால் தமது பதவிகளை இராஜினாமா செய்தனர். அதன் பின்பு கருத்திட்டத்தில் இணைந்த மேலும் இரு எந்திரிகளும் குறுகிய காலத்திலேயே கருத்திட்டத்தை விட்டு நீங்கியதால், "ஒற்றை நிழற்பதிவுப் பெட்டியை அடிப்படையாகக் கொண்ட தேயிலை நிற இனம் காணல் முறைமை" எனப்படும் கருத்திட்டத்தின் முதற் கட்டமானது பூரணப்படுத்த இயலாது போய்விட்டது. கருத்திட்ட ஆக்கக்கூறுகளை முன்னெடுத்து செல்வதற்கு தேவைப்படும் FPGA எனப்படும் தொழில்நுட்பவியல் அறிவில் நிகழும் பற்றாக்குறையும் அவதானிக்கப்பட்டது.

இதே விளைவளவு தொடர்பிலும் கருவிகள் கொள்வனவு தொடர்பிலும் ரூபாய் 3.2 மில்லியன் செலவிடப்பட்டமை உண்மையாகும். இது ஒரு செலவினம் என்று மட்டுமே கூறமுடியாது. இது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் செய்யப்பட்ட ஒரு பலன் மிகு முதலீடு என்றும் கூறலாம்.

(iii) நிறுவகத்தில் ஒரு மின்னணுவியல் பிரிவு ஒன்று உண்டு எனினும் FPGA (கள நிகழ்ச்சித்திட்ட வாயில் பிரிவு) உயர் தொழில்நுட்பவியல் திறன் அறிவு இருந்தால் மாத்திரமே இந்தக் கருவியினை உற்பத்தி செய்யலாம். ஒரு சாதாரண மின்னணுவியல் எந்திரிக்கு அத்தகைய பரந்த அறிவு இருக்காது, (பல்கலைக்கழகத்திலும் இவ்விடயம் தொடர்பில் போதிய அறிவு வழங்கப்படுவதில்லை) என்பதுடன் இந்த செயல்திறனானது வெளிநாட்டில் பயிற்சியினை பெற்றுக்கொள்வதனூடாக தமது செயற்றிறனை வளர்த்துக் கொள்ளலாம்.

இந்த தொழில்நுட்பவியல் அறிவினை வெளியிடங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு ஆளுனர் சபையிடம் அனுமதியினை கோரி தக்க நியாயங்களுடன் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்தக் கருவியானது, இரு தொழில்நுட்பங்களையும் அதாவது இயந்திரவியல் எந்திரவியல் மற்றும் மின்னணுவியல் எந்திரவியல் ஆகிய இரு தொழில்நுட்பங்களையும் உச்ச அளவில் பயன்படுத்தும். FPGA மின்னணுவியல் தொழில்நுட்பத்தை வெளியிடங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு உடன்பட்ட போதிலும், இயந்திரவியல்

கருவியானது நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகத்தின் பொறுப்பு என்பதினால் அதனை அதே பூரணப்படுத்தல் வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது. இந்தச் செயற்பாடானது, இயந்திரவியல் உற்பத்திகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் உதவியுடன் செய்யப்படல் வேண்டும். எனினும் இத்தகைய நிறுவனங்கள் மிகவும் அரிது என்பதினால், கருத்திட்டத்தின் கட்டம் 1 மற்றும் கட்டம் 3 ஆனது குறிப்பிட்டு சொல்லத்தக்களவு தாமதமாகியது. எவ்வாறாயினும், இக் குறிக்கோளை சாதிக்கக்கூடிய வகையில் சகல முயற்சிகளும் இது தொடர்பில் எடுக்கப்பட்டன.

(ஆ) <u>தொல் பொருள் ஆய்வுகள் மற்றும் அகழ்வுகள் என்பவை தொடர்பில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல்</u>

மனிதர்களினால் ஓட்டப்படாத இந்த UVA வாகனமானது அனேகமாக அபிவிருத்தியடைந்த நாடுகளினாலேயே கொள்வனவு செய்யப்படுகின்றது இது வேறுபட்ட துறைகளின் நிமித்தம் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு தேவைப்படும் நிழற்படங்களை உயரே சுற்றுச் சூழலிருந்து படம் எடுப்பதற்கு உதவுகின்றது. இத்தகைய ரீதியில் ஆய்வு செய்யப்படும் துறைகளில் தொல் பொருளாராய்ச்சி எனும் துறை முக்கிய இடத்தை வகிக்கின்றது

2016 நவம்பர் 30 ஆம் திகதி இடம்பெற்ற ஒரு விபத்தின் காரணமாக சேதமடைந்த UAV தொடர்பில் ஒரு மதிப்பீட்டு செயற்குழு அறிக்கையை நிறுவகம் பெற்றுக்கொண்டதுடன் UAV டிரானை (drone) திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

UAV டிரான் ஆனது திருத்துவதற்காக ஒரு உள்ளூர் முகவரிடம் 2017 பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதி கையளிக்கப்பட்டதுடன் அது திருத்தப்பட்டு 2017 மே மாதம் 12 ஆம் திகதி நிறுவகத்திற்கு திரும்பவும் கையளிக்கப்பட்டது. UAV டிரானில் திருத்தியதற்கு பின்னர் இன்னமுமே தொழில்நுட்பவியல் குறைபாடுகள் இருந்ததென எமது நிறுவகத்தினால் முன்னெடுக்கப்பட்ட பரிசீலனை மூலம் தெரியவந்ததினால் UAV டிரான் ஆனது மீண்டும் அக முகவர் நிலையத்திடம் இந்தக் குறைகள் திருத்தப்படுவதற்கு கையளிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் நவம்பர் மாத இறுதியில், UAV டிரானின் பழுதுகளாவன திருத்தப்பட்டன என அறியச்செய்யப்பட்டதுடன், அக முகவரைச் சார்ந்த தொழில்நுட்பவியல் அலுவலர்களின் உதவியுடனும் கண்காணிப்புடனும் மேலே உயரத்தில் பறப்பதற்கான அனுமதியனை கடிதம் மூலம் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது இதைத் தொடர்ந்து கணக்காய்வு அறிக்கையில் அவதானிக்கப்பட்டதைப் போன்று, வாகனத்தை தொழிற்படச் செய்தல் தொடர்பில் மூன்று நாட்களைக் கொண்டதொரு அடிப்படைப் பயிற்சியானது வெளிநாட்டில் இரு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.

4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

(அ) நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க்கிற்கும் மற்றும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவிற்கும் இடையிலான உடன்படிக்கைக்கு அமைவுற, 2014 டிசம்பர் மற்றும் 2015 ஜனவரி மாதத்திற்கான கொடுப்பனவுகள் கொடுக்கப்படவேண்டி இருந்தபோதும் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்துகை ஆணைக்குழுவானது, அவர்கள் பயன்படுத்தும் அலுவலக அறையானது ஏற்புடைய தர நியமங்களுக்கு அளவாக கட்டப்படவில்லை என்ற காரணத்தினால் தாம் கொடுப்பனவு செய்ய இயலாது என்று எழுத்தில் அறியச் செய்தனர். எவ்வாறாயினும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவிடம் கலந்துரையாடிய பின்னர் அத்தொகையினை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகமும் மற்றும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவும் இரு சாராரினதும் விருப்பத்தின் கீழ் இரு வருடங்களுக்கு ஒரு உடன்படிக்கையில் நுழைந்தனர். உடன்படிக்கையின்படி மீளாய்வு செய்யப்பட்ட வாடகைப்பணமானது, 2015 ஆக்ஸ்ட் மாதத்திலிருந்து நிறுவகத்திற்கு கிடைக்கப்பெறுதல் வேண்டும். எனினும் அலுவலகத்தின் பராமரிப்பு பணிகளாவன, 2015 பெப்ரவரி மாத 01 ஆம் திகதியிலிருந்து ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரையில் முன்னெடுக்கப்பட்டமையினால் இந்த காலப்பகுதியானது உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவில்லை.

புதிய உடன்படிக்கையின் பிரகாரம், அவர்களால் பராமரிப்பு வேலைகள் முன்னெடுக்கப்பட்ட காலப்பகுதியான 2015 பெப்ரவரி 01 இலிருந்து ஜூலை 31 ஆம் திகதி வரைக்குரிய விலை விபரப்பட்டியல்களாவன இந்த புதிய உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. குத்தகை உடன்படிக்கையின்படி, கொடுப்பனவுகளாவன 03 மாதங்களுக்கு அதாவது, ஆகஸ்ட் மாதத்திலிருந்து ஒக்டோபர் மாதம் வரையில் ஒரு மாதத்திற்கு ரூபாய் 91,162/- என்ற அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், புதிய உடன்படிக்கையின்படி மாதாந்த வாடகையில் 5% அதிகரிப்பு மாத்திரமே வசூலிக்கப்படல் வேண்டும். இதற்கமைவுற, ரூபாய் 24,022.41 எனும் தொகையானது நிறுவகத்தினால் வசூலிக்கப்படல் வேண்டும்.

உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர், 2016 பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதியில் தொடங்கி, 2017 ஜனவரி 31 ஆம் திகதி வரையில் உள்ள 12 மாதங்களுக்கு விலைப்பட்டியல்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

(இ) <u>நில அவதானிப்பு தரவுகளை பெற்றுக்கொள்வதற்கும் விநியோகிப்பதற்குமான தேசிய மைய நிலையம்</u>

இந்த நிறுவகத்திற்கு 10 ஏக்கர் விஸ்தீரணத்தை உடைய இந் நிலப்பரப்பானது மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் மாநகர அபிவிருத்தி பிரிவினால் வழங்கப்பட்டது. சீன தேசத்துடன் உடன்பட்டதற்கு அமைவுற, நில அவதானிப்பு

தரவுகளை பெற்றுக்கொள்வதற்கும் விநியோகிப்பதற்கும் ஒரு தேசிய மைய நிலையத்தை இந்த இடத்தில் தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்நிலையத்திற்கு ஏற்புடைய வகையிலும் மற்றும் தேவைப்படக்கூடிய தரவுகளை விருத்தி செய்யக்கூடிய செயல்திறன் கொண்ட வகையிலும் ஒரு நிலையத்தை அதாவது, தொழில்நுட்பத்துறை தொடர்பில் ஒரு ஆராய்ச்சி மற்றும் கல்வியியல் மைய நிலையம் ஒன்றை கட்டுவதற்குகந்த வகையில் 15 ஏக்கர் நிலப்பரப்பை பெற்றுக்கொள்ளல் ஏற்புடையது என மேற்போந்த ஆய்வுகளின் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. மேலும் இவ்விடயம் தொடர்பில் நவீன தொழில்நுட்பவியல் ஆர்தர் சி. கிளார்க் நிறுவகத்தினாலும் நகர அபிவிருத்தி அதிகார சபையினாலும் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகள் இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளது. இதற்கமைவுற, இத்தகைய நிலையம் ஒன்று தெரிவுசெய்யப்பட்டதொரு நிலத்தில் தாபிக்கப்படும் என்பதுடன் அது அண்மித்த எதிர்காலத்தில் நிறுவகத்திற்கு சொந்தமாக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கணக்காய்வு விசாரணையின் பிரகாரம் நிறுவகத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டதொரு நிலத்தைச் சுற்றி வேலி கட்டுவதற்கு ரூபாய் 3,545,744/- மில்லியனானது நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்ட போதிலும் இந்த வேலியானது இன்னும் கட்டப்படவில்லை. எனினும் இந் நோக்கத்திற்கு பொருத்தமான வேறொரு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர் அந் நிலத்தைச் சுற்றி வேலி கட்டப்படும்.

(உ) கணக்காய்வில் இனம் காணப்பட்டதைப் போன்று பாவிக்கப்படாத இருப்புகள் எனும்போது அவை தொழில்நுட்பவியல் துணையுறுப்புகள் ஆகும் என்பதுடன் இவை நடப்பிலுள்ள கருத்திட்டங்கள் நிமித்தம் பயன்படுத்தப்படும் என்பதுடன், எதிர்காலத்தில் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்த்துள்ள கருத்திட்டங்களிலும் இந்த துணையுறுப்புகள் பாவிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. தொழில்நுட்பவியல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஒரு நிறுவகம் என்றவகையில், விரிவாக ஒரு மதிப்பீட்டினை மேற்கொள்ளாது இத்தகைய துணையுறுப்புக்களை அப்புறப்படுத்துவது/அகற்றுவது செயல்முறை ரீதியாக சாத்தியமானதொரு விடயம் அல்ல. இந்த துணையுறுப்புக்களில் அநேகமானவை காலம் தாழ்த்தப்பட்டவை அல்லது பாவிக்கப்பட முடியாத நிலையில் இருப்பவை அல்லவே.

(ஊ) இந்த விடயம் தொடர்பில் சுயாதீனமானதொரு பரிசீலனை முன்னெடுக்கப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட விடயங்களாவன நிறுவகத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழு கூட்டத்தின்போது முன்வைக்கப்பட்டது. சபை உறுப்பினர்கள், சேதத்திற்குரிய தொகையானது நிறுவகத்திற்கு சாரதியினால் செலுத்தப்படல் வேண்டும் என தீர்மானித்தனர். இதற்கமைவுற சாரதியிற்கு அது எழுத்தில் பணிக்கப்பட்டது. இதற்கமைவுற சாரதியும் இந்தத் தொகையினை தன்னால் ஒரேயடியாக செலுத்த முடியாது என்றும் இதனை மாதாந்தம் தவணை முறையில் கட்டுவதற்கு அனுமதி வழங்கும்படியும் கோரிக்கை விடுக்க கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. ரூபாய் 50,063.00 என மதிப்பீடு செய்யப்படதுடன் சாரதியிடமிருந்து பெறவேண்டிய

தொகையாக உறுதிசெய்யப்பட்ட இத்தொகையானது பெறவேண்டிய தொகை என்று கணக்குகளில் காட்டப்பட்டது.

4.3 பதவியணி நிர்வாகம்

(அ) எந்திரவியலாளர் பதவி நிலையில் வெற்றிடங்கள் நிலவிய போதிலும், நிறுவகத்தின் தொழில்நுட்பவியல் வகுப்பில் சிரேட்ட மட்டத்து பதவியில் உள்ள வெற்றிடங்களாவன நிறுவகத்தினது பிரிவின் தலைமைத்துவ பதவிக்குரிய ஆட்சேர்ப்பு என்ற முறையின் கீழ் நிரப்பப்பட்ட பின்னரே எந்திரவியலாளர் பதவிநிலையிலுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும். இந்த சிரேட்ட மட்டத்து பதவிநிலைகளுடன் தொடர்புடைய ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு செயன்முறைகளுக்கு அமைவுற, கல்வித் தகைமைகளும் அனுபவமும் கவனத்திற் கொள்ளப்படும். எனினும் ஏனைய அரச மற்றும் தனியார் துறையில் இதே பதவி நிலையில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் சம்பள நிலையினைவிட இவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தின் அளவு மிகவும் குறைவாகும் என்பதினால் தகைமையுடைய அபேட்சகர்கள் இந்தப் பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பிப்பதில்லை, விண்ணப்பித்தவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு கலந்துகொள்வதில்லை என்பதினால் இந்த சிரேட்ட மட்டத்து பதவி நிலைகளாவன வெற்றிடமாகவே உள்ளது. ஆதலினால் நிறுவகத்தின் செயற்பாடுகளுக்கு சமனாக உறுதுணையாக இருக்கும் தொழில்நுட்பவியல் அல்லாத பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தலானது சமனாக இல்லை.

(ஆ) கணக்காய்வு விசாரணைகளில் குறிப்பிட்டது போன்று கிட்டத்தட்ட நிறுவகத்தின் தொழில்நிலைப்பிரிவில் 70% மான வெற்றிடங்கள் நிலவுகின்ற போதிலும் நிறுவகம், அது சாதிக்க எதிர்பார்த்துள்ள இலக்குகளை தற்போது இருக்கின்ற பதவியணியினரின் உறுதுணையுடன் பூரணப்படுத்த இயலுமாகும். மேலும் நிறுவகமானது மேற்கூறப்பட்ட அதனது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட தடைகளுடன் உச்ச அளவிலான முன்னேற்றத்தை சாதித்துள்ளது என்பதை அறியச் செய்கின்றது.

(இ) நிறுவகமானது இந்த பதவிநிலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு பல தடவைகளில் பத்திரிகையில் விளம்பரப்படுத்திய போதிலும் ஏற்புடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து பொருத்தமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத காரணத்தினால் இந்த பதவிநிலைகள் இன்னமுமே வெற்றிடமாகவே உள்ளது. இந்த பதவிநிலைகளுக்கு தகைமையுள்ளவர்களை ஆட்சேர்ப்பு செய்து அவர்களை அந்த பதவிகளில் தக்கவைத்துக்கொள்ள முடியாது இருப்பதற்கு காரணம் அதே ஒத்த பதவிநிலைகளுக்கு வேறு அரச மற்றும் தனியார் துறையில் வழங்கப்படும் அதிக சம்பளமாகும். (ஒரே தகைமைகளை கொண்டிருந்தபோதிலும்)

உயர் மட்டத்து பதவிகளில் நிலவும் வெற்றிடத் தன்மையினை நிரப்பும் பொருட்டு ஆளுனர் சபையின் அனுமதியுடனேயே இந்த அலுவலர்கள் இந்த பதவிகளில் செயலாற்றியதுடன் இது அவர்களது வழக்கமான பணிகளினை விட மேலதிகமாக அவர்களால் ஆற்றப்பட்ட பணி என்பதுடன் இதற்கு ஏதுவாக அமைந்தது, நிறுவகத்தின்

நிர்வாகம் மற்றும் ஏனைய செயற்பாடுகளில் ஏற்பட்ட அவசர நிலை காரணமாகும், என்பதுடன் இப்பதவிகளுக்கு அதாவது இந்த சிரேட்ட மட்ட பதவிகளுக்கு வெளியிலிருந்து விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கவும் இல்லை. எவ்வாறாயினும் இந்த பதவிகளை நிரந்தரமாக நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

5 கணக்களி பொறுப்பும் நல் ஆளுகையும்

5.1 செயல்திட்டம்

(அ) நிறுவகத்தின் தொழில்நுட்பவியல் பிரிவுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் யாவற்றிற்கும் பொதுவாக உயர் தொழில்நுட்பவியல் திறன்மிகு கருவிகள் தேவையாகும். இந்தக் கருவிகளாவன பற்பல கருத்திட்டங்களுக்கு அதே வருடத்திலோ அல்லது அடுத்தடுத்து வருகின்ற வருடங்களில் நடைமுறைப் படுத்தப்படும் கருத்திட்டங்களிலோ பயன்படுத்தப்படும். இந்தக் காரணத்தினால் மூலதனச் செலவினமானது எவ்வளவு என்பதனை தனியாக வேறுபடுத்தி அறிய முடியாது என்பதுடன், தனியாக பிரித்தறியக்கூடிய மூலதன செலவினமானது தனியாக காட்டப்பட்டுள்ளது.

அடுத்துவரும் வருடத்தின் இறுதியில் தயாரிக்கப்படும் செயலாற்றுகை அறிக்கையில் கருத்திட்டம் தொடர்பில் செலவிடப்பட்ட உண்மையான செலவினத்தை வேறுபடுத்தி காட்டுவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

(ஆ) மேலே பகுதி (அ) இல் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவுற, மூலதன செலவினத்திற்கு மற்றும் கருத்திட்டத்தின் வளர்ச்சிக்கும் எதுவித இடைத்தொடர்பும் இல்லை. எவ்வாறாயினும், கருத்திட்டத்தின் பௌதீக வளர்ச்சியானது எந்தளவு வீதம் எதிர்பார்க்கப்படுகின்றது என்பதனை எதிர்காலத்தில் செயல்திட்டம் தயாரிக்கும் போது, அச்செயல்திட்டத்தில் குறிப்பீடு செய்யப்படும்.

5.2 கொள்முதல் திட்டம்

(அ) நிறுவகத்தினால் கொள்வனவு செய்யப்படுபவை அநேகமாக தொழில்நுட்பசார் பொருட்களாகும். ஆதலினால் அதனது மதிப்பீட்டு பெறுமானத்திற்கும் உண்மையான பெறுமானத்திற்கும் வித்தியாசத்தை காணக்கூடியதாக இருப்பதினால், மதிப்பீட்டு பெறுமானத்தின் மிகுதித் தொகையும் கணக்காய்வு அவதானிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் சில கொள்முதல்களாவன நிறுவகத்தினால் கோரப்படும் தரத்தில் இல்லாததினால் அவற்றை இரத்து செய்யவேண்டிய நிலை ஏற்படுவதினால், அச் செயன்முறையினை பூரணப்படுத்துவதற்கு கணிசமானளவு காலம் விரயமாகவேண்டி இருக்கின்றது என்பதுடன், சில சந்தர்ப்பங்களில், அந்த விலைக்குறிப்பீட்டு மனுவை மீண்டும் அழைக்கவேண்டியும் இருக்கின்றது. இந்த

சந்தர்ப்பங்களில் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட வருடத்திற்குரிய ஒதுக்கீடு பயன்படுத்தப்படாது எதிர்வரும் வருடத்திற்குரிய ஒதுக்கீடு பயன்படுத்தப்படுவதுண்டு.

மேலும், தற்போது நடப்பிலுள்ள கொள்முதல் செயன்முறையினை இன்னும் வினைத்திறன் மிகுந்த முறையில் கணக்காய்வில் காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கு அவதானத்தை செலுத்தி முன்னெடுப்பதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்படும்.

சில கொள்முதல்களை பொறுத்தவரையில் அவை சிக்கலானவை என்பதுடன் அவை தொடர்பில் ஒரு விநியோகத்தரை தெரிவுசெய்வதும் கடினமாகும் என்பதுடன் சில சந்தர்ப்பங்களில் ஒரு வருடத்திற்கும் அதிகமான காலத்தை எடுக்கும். சில சந்தர்ப்பங்களில் சந்தைக்கு வந்திருக்கும் புதிதான வகையினைச் சார்ந்த தொழில்நுட்பவியல் கருவிகளினது குறித்துரைப்புகளுக்கு அமைவுற, நிறுவகம் விலை குறிப்பீடுகளை விநியோகத்தருக்கு முன்வைக்குமிடத்து, விநியோகத்தர்கள் அந்த விலைக் குறிப்பீடுகளுக்கு பதிலளிக்காது விட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. அந்த சந்தர்ப்பங்களில் புதிய குறித்துரைப்புகளை இரத்து செய்துவிட்டு பழைய கருவியினது அமைப்புக்கேற்றவாறு புதிதாக குறித்துரைப்புகளையும் கொள்முதலுக்குரிய ஆவணங்களையும் நிறுவகம் தயாரிக்கும் அந்த சந்தர்ப்பங்களில் இந்த கொள்முதலானது சம்பந்தப்பட்ட வருடத்திற்குரிய ஒதுக்கீட்டினை பயன்படுத்தி முன்னெடுக்கப்பட முடியாதுவரும் என்பதுடன் அந்த கொள்முதல் முன்னெடுக்கப்படும் வருடத்திற்குரிய ஒதுக்கீடு பயன்படுத்தப்படவேண்டிய நிலை ஏற்படும். இத்தகைய நிலைப்பாடு கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

பொருட்கள் விநியோகிப்பதற்கு தாமதமாயின் அதற்கான கட்டணம் விதிக்கப்படும் என கேள்வி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டபோதிலும் சில சந்தர்ப்பங்களில் விநியோகத்தர் அந்தக் கட்டணத்தை செலுத்துதற்கும் மறுப்பதுண்டு.

ஆதலினால் கணக்காய்வு அறிக்கையில் கொள்முதல் தொடர்பில் தரப்பட்ட விடயங்களுக்கு விசேட கவனத்தை செலுத்தி எதிர்வரும் வருடங்களில் கொள்முதல் தொடர்பிலான செயன்முறைகளை மேலும் வினைத்திறனுடன் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

6 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

(அ) <u>மனித வலு முகாமைத்துவம்</u>

(i) அவசர நிலைமைகளின்போது விடுமுறை தினங்களில் பணியாற்றுவதற்கு பொதுவான முன் அனுமதி ஏற்கனவே பெறப்பட்டிருந்தபோதிலும் சில சந்தர்ப்பங்களில் அத்தகைய அவசர நிலைமைகளில் குறிப்பிட்ட பிரிவின் தலைமைத்துவத்திற்கு தேவையான பணிகளை ஆற்றிய பின்னர் அனுமதிகள் பெறப்படுவதுண்டு. அத்துடன் குறிப்பிட்டதொரு பணி தொடர்பில், அப்பணியின் அவசர நிலைமை கருத்திற் கொள்ளப்பட்டு, தொலைபேசி மூலமாகவோ அல்லது வாய் வார்த்தை மூலமாகவோ பணியாற்றும்படி பணிக்கப்படுவதுண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட அந்த ஊழியர் தனக்கு

இடப்பட்ட பணியை விடுமுறை நாளில் செய்து முடித்த பின்னர் அந்த நாளிற்கான அனுமதியினை உரிய படிவத்தை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்வதுண்டு. இங்கு பணிக்குரிய தேவைப்பாடும் அதனால் நிறுவகத்திற்கேற்படக்கூடிய வாய்ப்பு வளமும் மட்டுமே கருத்திற்கொள்ளப்பட்டு அப்பணி பூரணப்படுத்தப்படும்.

(ii) வருகை பதிவேட்டில் பதியப்படும் வருகைகளாவன, வருகையினை விரலின் துணையுடன் பதிவு செய்கின்ற இயந்திரத்திற்கு அமைவுற பேணப்படுகின்றது. வருகை பதிவேடானது சம்பந்தப்பட்ட அலுவலர் ஒருவரினால் சான்றுபடுத்தப்படாத போதிலும் அப் பதிவேட்டில் உள்ள பதிவுகள் செம்மைத் தன்மையானதாகும். எவ்வாறாயினும் கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டதைப் போன்று வருகை பதிவேட்டிலுள்ள பதிவுகளை சம்பந்தப்பட்ட அலுவலர் ஒருவர் மூலம் சான்றுபடுத்த எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) <u>நிதியியல் கட்டுப்பாடு</u>

(i) கணக்காய்வு அறிக்கையில் அவதானிக்கப்பட்டதைப் போன்று கொடுப்பனவுக்கான வவுச்சர்களில் இணைக்கப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைவுற சகல வவுச்சர்களுக்கும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும் உரிய முத்திரையினால் பதிவு வைப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ii) விடுமுறை தினங்களில் மேலதிக நேரம் கடமையாற்றுவதற்கு விண்ணப்பிக்கவேண்டி வருமிடத்து, நிறுவகமானது தற்போது அதே படிவத்தினையையே பயன்படுத்துகிறது.

(இ) <u>தொழிற்பாடு கட்டுப்பாடு</u>

(i) நாட்டிற்கு வெளியே செல்லும்போது எடுக்கப்படும் விடுமுறை தினங்கள் எனும் விடயம் தொடர்பில் கோப்புகளை இற்றைப்படுத்தும்போது சில சந்தர்ப்பங்களில் அமைச்சின் அனுமதியானது உரிய திகதிகளில் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில், கோப்புக்களாவன அக்குறிப்பிட்ட அனுமதி தொடர்பிலான விபரங்கள் கிடைக்கப்பெற்ற உடனேயே இற்றைப்படுத்தப்படும்

(ii) அலுவலர் ஒருவர் தாம் திரும்பி கடமைக்கு அறிக்கை செய்யும் திகதியினை குறிப்பிட்ட பின்பே அவருக்கு உரித்துடைய விடுமுறையை அவர் பெற்றுக் கொள்வார். எவ்வாறாயினும், கடமைக்கு அறிக்கை செய்த திகதியினை அறிவிக்கும் வகையில் ஒரு கடிதம் கிடைக்கப்பெறாததினால் எதிர்காலத்தில் இந்த கடிதத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

.....

.....

எந்திரி சண்த் பன்னவென்னகே
பணிப்பாளர் நாயகம்/பிரதான நிறைவேற்று அதிகாரி.

© Arthur C Clarke. Institute for Modern Technologies

Katubedda, Moratuwa, 10400, Sri Lanka

Email us : info@accmt.ac.lk

Call us (General) : : Telephone : +94-11-2650569, +94-11-2650838

Fax : +94-11-2650462

www.accimt.ac.lk